SWAMI VIPULANANDAR KALA MANDRAM - MATALE

1968 - 2018

மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம்
நடாத்தும் 50வது ஆண்டு

# "பொன்விழா"
# சிறப்பு மலர்



வெளியீடு :

**சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம் - மாத்தளை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

" முத்தமிழ் பொன்விழா " சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்..!

" தங்கத்தின் இளைய தங்கை "

# RESHMA

**Design Creator & Metal Processing Specialist**

**Manufacturers & Distributors Of Reshma Designer Jewellery**




## GUARANTEED 22CT GOLD PLATED JEWELLERY




www.reshma.lk

**RESHMA®**

**59/1, Muhandiram Road, Matale, Sri Lanka.**
**Tel: +94-66-2223406/066-2222724**
E-mail : resshmaeti@sltnet.lk

**BRANCHES:**
SALMAN TRADING
229-1/14, Santhosh Plaza, Main Street, Colombo 11.
(+94) 777 936 970
(+94) 77 932 7060
(+94) 11 239 4512

**ELECTRO TECHNICAL INDUSTRIES**
105 E, King Street, Matale.
(+94) 77 666 1336
(+94) 777 768 736
(+94) 66 222 3406

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SWAMI VIPULANANDAR KALA MANDRAM - MATALE

சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம்
மாத்தளை

1968 - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மாத்தளை
சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம்
நடாத்தும்

# 50வது நினைவு தின

# "பொன்விழா சிறப்பு மலர்"

**22.07.2018 ஞாயிற்றுக்கிழமை**




வெளியீடு
**சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம்**
**மாத்தளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968 - 2018

# சமர்ப்பணம்



சுவாமி விபுலாநந்த
அடிகளாரின் பாதகமலங்களுக்கு
இச் சிறப்பு மலரை காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து....

காதொளிருங் குண்டலத்தாள்
கனிமொழியாள் வாழ்க !
கைக்குவளை யாபதிகொள்
கன்னிகையாள் வாழ்க !

மேதகு மென் மார்பிடைச்சிந்
தாமணியாள் வாழ்க !
மின்னுமணி மேகலை சூழ்
மெல்லிடையாள் வாழ்க !

சீதமலர் பாதமொளிர்
சிலம்புடையாள் வாழ்க !
சேர சோழ பாண்டியர் தஞ்
செல்வ மகள் வாழ்க !

நீதியுறுஞ் செங்கோளாய்
தூயகுறள் தாங்கும்
நிகரறியாச் செந்தமிழ்த் தாய்
நீடூழி வாழ்க !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து....

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே !
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே !
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே !
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே !
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே !
வாழ்க தமிழ் மொழி ! வாழ்க தமிழ் மொழி !
வாழ்க தமிழ் மொழியே !
வானம் அளந்த அனைத்து அறிந்திடும்
வளர்மொழி வாழியவே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலாநந்தர் கலா மன்ற அங்கத்தவர்கள்




முதலாம் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் :

S.செல்வராஜ் ஆசாரியார், S.V. சுப்பையா, W.D.யோகராஜா, V.ஜெயக்குமார், M.முருகையா, S.ராஜ்சிவா சிவலிங்கம் ( தலைவர் ) C.ஜெயராஜ் ( செயலாளர் ) M.நடராஜா ( பொருளாலர் ) S.யோகேஸ்வரன் ( உப தலைவர் ) B.ருத்ரா தாரா சிங்

இரண்டாம் வரிசை இடமிருந்து வலமாக

A.சுதாகரன், S.ஸ்ரீதரன், செல்வி.S.திலகராணி, , செல்வி K.கிருஷாந்தி, திருமதி.S.செல்வி கிருஷ்ணராஜா, செல்வி K.கிருஷ்னியா செல்வி.K.மேகலா, திருமதி.V.ஜீவராணி, செல்வி.புஸ்பிகாதேவி, திருமதி.D.யோகராணி, திருமதி.V.ஜானகி ராணி, திருமதி.D.M.A.ஞானசுந்தரி, திருமதி.இந்திரா சிவலிங்கம், .S.கௌரிசங்கர், P.நிருஸ்பிரசாத்

மூன்றாம் வரிசை இடமிருந்து வலமாக

M.நடராஜா, P.துஷ்யந்தன், S.மகலன், P.செந்தில் குமார், B.பொன்னையா, V.கலைச்செல்வன், K.திருநாவுக்கரசு, M.துஷ்யந்த பிரசாத், R.செல்வேந்திரன் A.H.M.தஷ்ரிக், A.யோகராஜா செட்டியார் ( உபசெயலாளர் ) P.சத்திய சீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்ற கீதம்..!

**ஈசன் உவக்கும் இன்மலர்கள்**

வெள்ளை நிற மல்லிகையோ
    வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியினைக்கு
    வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
    வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
    உத்தமனார் வேண்டுவது

காப்பவிழ்ந்த தாமரையோ
    கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு
    வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல
    கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி
    கோமகனார் வேண்டுவது


பாட்டாளிசேர் பொற்கொன்றையோ
    பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவர்க்கு
    வாய்த்த மலரெதுவோ
பாட்டாளிசேர் பொற் கொன்றையல்ல
    பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி
    நாயகனார் வேண்டுவது

- விபுலானந்த அடிகள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | " பொன்விழா " சிறப்பு மலர் |
| மலர் ஆக்கம் | : | திரு.S.ராஜ்சிவா சிவலிங்கம்<br>(மன்ற தலைவர்)<br>திரு.A.சுதாகரன் (மன்ற உறுப்பினர்) |
| வெளியீடு | : | சுவாமி விபுலாநந்தர்<br>கலா மன்றம்,<br>மாத்தளை. |
| பதிப்பு | : | 22.07.2018 ஞாயிற்றுக்கிழமை |
| கணனி வடிவமைப்பு | : | கருணாமூர்த்தி லாவண்யா |
| அச்சுப்பதிப்பு | : | சுதா பிரிண்டஸ்,<br>இல.5/1, பள்ளி வீதி,<br>(செட்டி தெரு),<br>மாத்தளை.<br>066 2226579, 077 9326669 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரினுள்ளே..!


- மலரின் முகப்பு
- தமிழ்தாய் வாழ்த்து
- தமிழ்மொழி வாழ்த்து
- மன்ற கீதம்
- மலரினுள்ளே..!
- நூல் அறிமுகம்
- ஆசிச்செய்தி - சிவஸ்ரீ மணி சிவானந்த குருக்கள்
- வாழ்த்துச் செய்திகள்
  - கௌரவ அமைச்சர்
  - கௌரவ மத்திய மாகாண சபை உறுப்பினர்
  - கௌரவ மன்றத் தலைவர்
  - கௌரவ மன்ற செயலாளர்
  - கௌரவ பொருளாளர்
  - கௌரவ உபதலைவர்
  - கௌரவ உபசெயலாளர்
  - கௌரவ மன்ற ஸ்தாபகர்களில் ஒருவர்
  - டாக்டர்
  - டாக்டர் சுரேஸ் (ஆதார வைத்தியசாலை கண்டி )
- கட்டுரை முத்தமிழை நேசித்த சுவாமி விபுலாநந்த அடிகளாரும் மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்ற வளர்ச்சியும்
- கட்டுரை கிழக்கிலங்கை ஈன்றெடுத்த தவப்புதல்வன்
- கவிதை புதுமைக் கடவுள் ஆசானே
- கவிதை வாழ்க விபுலாநந்தர் திருநாமம்...
- கட்டுரை தலைமைத்துவ பண்புகளை வளர்ப்பதில் பாடசாலைகளின் பங்களிப்பு
- கடிதம் விபுலாநந்தர் எழுதிய கடிதம்
- கட்டுரை பண்பற்ற கல்வியால் பயனென்ன? (முத்தமிழ் விழா போட்டியில் முதலாம் இடம்)
- கட்டுரை சுவாமி விபுலாநந்தர் - பன்முகப் பார்வை
- கட்டுரை மூன்று தமிழ் வளர்த்த முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தர்
- கட்டுரை மனிதம் போற்றும் மனித விழுமியங்களை கடைபிடித்து வாழ்வோம்.
- விளம்பரங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி



### சிவஸ்ரீ மணி சிவானந்த குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் அருளாட்சி புரியும் மாத்தளை மாநகரில் அமைக்கப்பெற்றிருக்கும் சுவாமி விபுலாநந்தர் கலாமன்றம் 22-07-2018 இவ்வருடம் சுவாமி விபுலாநந்தரின் நினைவு விழாவினை நடாத்த இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

சுவாமி விபுலாநந்தர், ஈழத்திருநாட்டின் அருந்தவப் புதல்வர்களில் ஒருவர். இயல், இசை, நாடகம் எனும் மூன்று துறைகளிலும் ஆழ்ந்த புலமை கொண்டிருந்தார். அவர் தமிழ்மொழிப்பற்றும், சமயப்பற்றும் உடையவர் என்பது உலகறிந்த விடயம். இவ்வாறான பெருமை பெற்ற மகானுக்கு வருடம் தோறும் நினைவு கூர்ந்து விழா எடுப்பதோடு, இவ்வாண்டு 50வது ஆண்டு பொன்விழாவை கொண்டாட இருப்பது அறிந்து உவகை அடைகிறேன்.

அவரது நினைவைக் கொண்டாடுவதன் மூலம் மாணவர்களது மனதிலே உயர்ந்த இலட்சியங்கள் மலரும், எதிர்கால சமுதாயம் சிறப்புடன் அமையும், 50வது ஆண்டு பொன்விழா சிறப்பாக நடைபெறவும், விபுலாநந்த கலாமன்ற செயற்பாடுகள் மென்மேலும் வளரவும், இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

பிரதம சிவாச்சாரியார்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,
மாத்தளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜாங்க கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி




වී. එස්. රාධාක්‍රිෂ්ණන් (පා.ම)
வி.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ)
V. S. Radhakrishnan (M.P)

අධ්‍යාපන රාජ්‍ය අමාත්‍ය
கல்வி இராஜாங்க அமைச்சர்
State Minister of Education


මගේ අංකය / எமது இல. / My No. } MOE/SM/2018/LP/522 — ඔබේ අංකය / உமது இல. / Your No. } — දිනය / திகதி / Date } 2018.07.11

*1968* ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை சிறப்பாக இயங்கி வரும் மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்றமானது அவரது 71வது நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் முத்தமிழ் பொன் விழா சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் உவகையடைகின்றேன்.

இலங்கை காரைதீவில் பிறந்த சுவாமி விபுலாநந்த அடிகள் இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலிய பல துறைகளை கற்று தேர்ச்சி பெற்றதோடு அவற்றை பேராசிரியர் என்ற வகையில் மற்றவர்களுக்கு கற்பிக்கவும் செய்துள்ளார். இவர் எழுதிய நூற்றுக்கணக்கான நூல்களில் மதங்கசூளாமனி மற்றும் யாழ்நூல் இவரது படைப்புகளில் விசேடமானவை. அதுமட்டுமன்றி இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழை வளர்க்கவும், சமுதாய முன்னேற்றத்திற்காக தொண்டாற்றிய இவரின் நோக்கத்தை தொடரும் வகையில் அமைந்துள்ள இக்கலாமன்றம் தனது பணிகளை செம்மையாக நிறைவேற்றி வருகின்றது.

மாமனிதரின் சேவையை எம் சமுதாயமும் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு பல தரப்பட்ட கலைப் பணிகளை எம் சமூகத்திற்கு ஆற்றி வருகின்றமை பாராட்டுக்குறியதொன்றாகும். சமூகத்தில் மக்களிடையே காணப்படும் கலை, கலாச்சார விடயங்களை வெளிக்கொனர்ந்து அவற்றுக்கு புத்தயிர் அளித்து வரும் முயற்சிக்கு இம்மன்றம் ஆற்றும் பணியை நான் வரவேற்கின்றேன்.

மேலும் இக்கலா மன்றமானது மாணவர்களிடையே போட்டிப் பரிட்சைகளை நடாத்தி பரிசில்களை வழங்கி அவர்களை இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஆர்வம் காட்ட செய்கின்றது. இது போன்று சமூகத்திற்காக இன்னும் பல நலன்களை புரிந்து, இம்மன்றத்தின் பணிகளை வளரச் செய்வது மட்டுமன்றி சமுதாய விழிப்புணர்வுகளையும் மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வீ.எஸ்.இராதாகிருஷ்ணன் பா.உ
இராஜாங்க கல்வி அமைச்சர்


Ministry of Education. 4th floor, "Isurupaya" Battaramulla, Colombo, Sri Lanka.
රාජ්‍ය අමාත්‍ය / இராஜாங்க அமைச்சர் / State Minister } +94 11 2 784 836 (Ext. 1414)
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } +94 11 2 785 449
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail } v.radhakishnan@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வாழ்த்துச் செய்தி



**கௌரவ மு.சிவஞானம்**
**மத்திய மாகாணசபை உறுப்பினர்**

**මධ්‍යම පළාත් සභාව**
**மத்திய மாகாண சபை**
**CENTRAL PROVINCIAL COUNCIL**

### இதய பூர்வமான வாழ்த்துக்கள்

மாத்தளை விபுலாநந்தர் கலா மன்றம் வருடந்தோறும் நடாத்தும் "முத்தமிழ் விழா" இவ்வருடமும், சிறப்பாக நடாத்த முன் வந்துள்ளதையிட்டு என் இதயபூர்வமான வாழ்த்துக்களை, அதன் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சமூகத்தின் பாரம்பரிய கலைகளை இயல், இசை, நாடகத்தறை மேம்படவும் தொடர்ந்து மிளிரவும் அதற்காக செயல் ஆற்றுகின்ற மாத்தளை விபுலாநந்தர் கலா மன்றத்தை பாராட்டாமலே இருக்க முடியாது.

கல்வியில் சிறந்த பெறுபேறுகளை பெறவேண்டியும், மாணவர்களின் மத்தியில் தெய்வத்திரு விபுலாநந்தர் அடிகளாரின் சேவைகள் பற்றி விழிப்புணர்வு பெறச் செய்யும் சேவைகள் பாராட்டுக்குரியது. தமிழ் பேசும் மக்களை இணைத்து செயல்படும் மாத்தளை விபுலாநந்தர் கலா மன்றம், சிங்கள மொழி பேசும் சகோதரர்களை அரவணைத்துக்கொண்டு செயல்படுவது விசேட அம்சமாகும் பாராட்டப்படவேண்டியது.

மனிதர்கள் வேகமாக எங்கோ எதற்கோ ஓடிக்கொண்டிருக்கும் காலத்தில் "முத்தமிழ் விழா" செய்வது பாராட்டுக்குரியது.

"எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றத் தலைவரது வாழ்த்துச் செய்தி



### கலாபூஷணம்
### மாத்தளை ராஜ்சிவா

பொதிகையிலே பிறந்து வைகையிலே தவழ்ந்து தென்னன் புகழிலே வளர்ந்த பைந்தமிழைப் பாரினில் அணிகலன்கள் பூட்டி அலங்கரித்தவர்கள் பலர். எமது தாய் மொழியான தமிழ்மொழி தேமதுரத் தமிழ் மொழியாம். அம்மொழியினை காத்து வளர்த்த சுவாமி விபுலாநந்தர் அடிகளுக்கு வருடந்தோறும் நினைவுகூர்ந்து தமிழ் பேசும் மக்களுக்கு பயன்படக்கூடியவகையில் விழா எடுத்து வருவது இச் சபையின் கடப்பாடாக இருந்து வருகிறது.

சுவாமி விபுலாநந்தரின் பணிகள் பன்முகப்பட்டவை. பல பரிமாணங்களைக் கொண்டவை. சமயத் துறவியாக, கல்விமானாக, ஆய்வாளனாக, சமூகப் பணியாளனாக, வாழ்ந்த சுவாமிகள் குறுகிய வாதங்களுக்கு அப்பாற்பட்ட பொதுமைப் பண்பு கொண்டவர். தேசிய ஒற்றுமையிலும், அக்கறை கொண்டு தூர நோக்கோடு செயற்பட்ட மானுடவாதி.

இத்தகைய ஒரு பெருமகன் நமது மத்தியில் தோன்றி வாழ்ந்தது நமக்குப் பெருமை சேர்ப்பதாகும், இன்று குறுகியஇனவாதங்களால் நமது நாட்டின் ஒற்றுமை , அமைதி, என்பது நிர்க்கதியாகி நிற்கும் சூழலில் சுவாமி விபுலாநந்தரது நினைவுகள் அவரது சிந்தனைகள் அவரது வாழ்வு நெறிமுறைகள் முன்னுதாரணமாக காட்டிய நடைமுறைகளை மீட்டுப்பார்ப்பது மிகவும் பொருத்தமானது. மதங்களை, இனங்களைக் கடந்து மனித நேசிப்புகக்கள் இன்றைய சமூகத்தின் அவசரத்தேவையாக உள்ளது. சுவாமி விபுலாநந்தரது செயற்பாடுகள் நமது எதிர்கால தலைமுறைக்கு நிச்சயமாக வழிகாட்டிடும் என்பதை மறக்க முடியாது.

சுவாமி விபுலாநந்தரது நினைவாக பாரிய சேவையினையாற்றி ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி “பொன் விழா” கொண்டாடவிருக்கும் சபையினது கௌரவ அங்கத்தவர்களது அயராத உழைப்புடன் தொடர்ந்தும் சேவையாற்ற சுவாமிகளது நல்லாசி கிடைக்கவும் பொன்விழா சிறப்புற அமையவும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளரது வாழ்த்துச் செய்தி



செயலாளர்
**செல்லையா ஜெயராஜ்**

மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம் தனது பொன் விழாவை இவ்வருடம் (2018) கொண்டாடுகின்றது என்பதை நினைக்கும் பொழுது எங்கள் உள்ளங்கள் உவகையில் பூரிக்கிறது. ஆரம்பத்தில் அதாவது 1968ல் ஒரு சில அங்கத்தவர்களுடன் இன, மத பேதமின்றி சுவாமியின் கொள்கையை கடைப்பிடித்து ஆரம்பமான மன்றம். இன்று வளர்ந்து 50 வருடங்களை பூர்த்தி செய்து சிறப்பாக செயற்பட்டு வருகிறது.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழை வளர்த்து வந்த இம்மன்றம் இன்று, பலதரப்பட்ட துறைகளில் தனது பங்களிப்பை செய்து வருவதுடன் முக்கியமாக வசதியற்றவர்களின் நலன் கருதி இலங்கைத் திருநாட்டின் பல மாவட்டங்களில் மருத்துவ முகாம்கள் நடாத்தி இலவசமாக மருந்துகளும் கொடுத்து உதவி வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் கல்வி, கலை, கலாசாரம் போன்ற பல்துறை கலைஞர்களையும், பெரியோர்களையும் கௌரவிப்பது ஓர் சிறப்பம்சமாகும்.

இவ்வருடம் மன்றத்தின் பொன்விழா ஜூலை மாதம் 22ம் திகதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கௌரவ தலைவரின் தலைமையில், மன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு பொன்விழா சிறப்பாக நடைபெற அன்னை பராசக்தியின் துணையை நாடுகிறோம்.

சுவாமி விபுலாநந்தர் கலா மன்றத்தின் பொன்விழாவை சிறப்பிக்க விசேட மலருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு மலர் வெளியீட்டுக் குழுவிற்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளரின் வாழ்த்துச் செய்தி



**பொருளாளர்**
**திரு.நடராஜா**

" உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது "

இலங்கைத் தீவின் குறிஞ்சி நிலப்பகுதியின் முத்தாய் விளங்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பிகை அருளாட்சி புரியும் மாநகரிலே முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் நினைவாக மன்றம் அமைத்து அதன் ஐம்பதாவது ஆண்டு முத்தமிழ் விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

மட்டக்களப்பு மாநிலத்தில் கல்லடி உப்போடையில் வாராது வந்துதித்து, உலகின் எட்டுத்திசைகளிலும் தமிழ் மொழியின் எழிலைப்பரப்பியவர் சுவாமி விபுலாநந்தர்.

1898 இல் ஆறுவயதில் பள்ளியில் சேர்ந்த இவர் 1916இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்வில் முதலாவது மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதர் என்னும் பெருமை பெற்றதோடு, 1924இல் சென்னை சென்று மயில்வாகனனார், இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து "பிரபோதசைதன்யர்" என்னும் பிரம்மச்சாரிய நாமம் பெற்றார். அதே ஆண்டு சித்திரைப் பௌர்ணமியில் துறவறம் மேற்கொண்டு "சுவாமி விபுலாநந்தர்" என்னும் பெயர் பெற்றார்.

சுவாமி விபுலாநந்தரின் அடிச்சுவடுகளை பின்பற்றி அவரின் நினைவாக இனம், மதம், மொழி இவைகளை கடந்து மானிடத்திற்கு பயனளிக்கும் வகையில் செயற்படும் சமூகத்தின் உள்ளக் கமலங்களை கௌரவிப்பது எம் அனைவரினதும் கடமையும் நன்றிக் கடனுமாகும்.

இதன் அடிப்படையில் இயங்கும் மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்றத்தின் 50வது ஆண்டு சிறப்பு மலர் இனிதே இதழ்விரிய என் இதயம் கனிந்த ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபதலைவரின் ஆசிச் செய்தி



**"தேசாபிமானி கல்வித் தீபம்"**
**சுப்பிரமணியம் தேவர் யோகேஸ்வரன்**

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மாநகர் ஈன்றெடுத்த ஈழத்தின் தவப்புதல்வன் சுவாமி விபுலாநந்தரின் முத்தமிழையும் வளர்க்கும் நோக்கில் மலையகத்தில் எழில் கொஞ்சும் மாத்தளை மாநகரிலே 1968ம் ஆண்டு உருவாக்கப்பட்டு 50 வருடங்கள் தமிழ் பணியாற்றி பொன்விழா காணும் " மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம்" பொன்விழா சிறப்பு மலர் வெளிவருவது மாத்தளை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

சுவாமி விபுலாநந்தரின் இலட்சிய வேட்கையை நிறைவு செய்யும் முகமாக வருடந்தோறும் மாத்தளை மாவட்ட பாடசாலைகளுக்கிடையே இயல், இசை, நாடக போட்டிகளை நடாத்தி முத்தமிழ் விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்து பரிசில்களை வழங்கி இளம் தலைமுறையினரின் எமது கல்வி, கலை, கலாசார பாரம்பரியங்களை வளர்த்தெடுக்கும் பாரிய பணியினை எமது மன்றம் மேற்கொள்கின்றமை மட்டற்ற மகிழ்வினை அளிக்கிறன்றது.

முத்தமிழோடு எமது மக்களின் வாழ்வை சீராக்கும் பணியாக வருடாந்தம் இலவச வைத்திய முகாம்கள், அனர்த்த உதவிகள், கல்வி நன்கொடைகள், சிறுவர்தின விழாக்கள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் என எமது மன்றத்தின் பணிகள் பரந்து செல்கிறது...

இவ்வாறானதொரு சிறப்பான காலகட்டத்தில் வெளிவரும் "பொன்விழா சிறப்பு மலருக்கு" மன்ற உப தலைவராக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைவதுடன், இப்பணிகள் மென்மேலும் சிறப்புற்று எமது மன்றம் நூற்றாண்டு விழாவினையும் கண்டு சுவாமி விபுலாநந்தரின் திருநாமம் நிலைத்திருக்கவும் எல்லாம் வல்ல அன்னை முத்துமாரியம்பிகையை பிரார்த்தித்து இம்மலர் இனிதாய் இதழ்விரித்து பாரெல்லாம் இனிய மணம் பரப்ப என் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

"வாழ்க தமிழ்...! வளர்க எம் தமிழினம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபசெயலாளரது வாழ்த்துச் செய்தி



உபசெயலாளர்
**A.யோகராஜா செட்டியார்**

இன, மத, பேதமின்றி சேவையாற்றி தமிழ் வளர்த்த சுவாமி விபுலாநந்தரின் நினைவாக மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்றத்தார் வருடம் தோறும் அறிவு பூர்வமாக விழா எடுத்து வருவது யாவரும் அறிந்ததே. காலத்தால் அழிக்க முடியாத கல்விச் செல்வத்தை வளர்க்க சுவாமி விபுலாநந்த அடிகளாரின் மகத்தான சேவையைத் தமிழ் பேசும் மக்கள் என்றும் மறக்கமுடியாது. தமிழ் பேசும் மக்களுக்கும் எமது வருங்கால மாணவ சமூதாயத்திற்கும் அவர் ஓர் எடுத்துக்காட்டாக சுவாமி அவர்களது செயற்பாடுகள் இருந்து வருகிறது என்பதை மறுக்கமுடியாது.

அதன் அடிப்படையில் மாத்தளை சுவாமி விபுலாநந்த கலாமன்றம் ஆரம்பகாலம் தொட்டு, இன்றுவரை மாணவ சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக, சுவாமி அவர்களது அடிச்சுவட்டை பின் பற்றுவதற்கான ஆக்கங்களை ஏற்படுத்தி அதாவது போட்டிப் பரீட்சைகள் நடாத்தி பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்து அவர்களை உற்சாகப்படுத்திவருகிறது.

இப்படியான நற்பணியினை பன்னெடுங்காலமாக மேற்கொண்டு 50வது ஆண்டை எட்டிப்பிடித்திருக்கிறது என்பது பெருமகிழ்ச்சிக்குறியதாகும். தொடர்ந்தும் சமூதாயத்திற்கு சேவையாற்ற காத்திருப்பதோடு நடைபெறும் 50வது ஆண்டு பொன்விழா சிறப்பாக நடைபெற எனது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, சுவாமியின் அருளாசி என்றும் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



"ஆரம்பகால தலைவரும், சிரேஸ்ட உறுப்பினரும்"
**M.முருகையா**

மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலாமன்றம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடத்துடன் 50வது ஆண்டை நிறைவு செய்து 51வது ஆண்டை தொடரவிருப்பதை நினைக்கும் போது உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. இந்நாளில் விழா எடுத்து வெளியிடவிருக்கும் மலருக்கு எனது நல்வாழ்த்துக்களை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் இச்சபையானது ஆரம்பகாலம் முதல் இயல், இசை, நாடகம் எனும் அடிப்படையில் முத்தமிழ் விழாவாக நடாத்திவருவதுடன், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் தமிழுக்கு ஆற்றிய அரும்பெரும் தொண்டினை இக்காலத்து தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமைவதோடு, அன்னாரின் அடிச்சுவற்றை பின்பற்றுவதற்கான ஒரு வாய்ப்பும் கிட்டுகிறது.


அந்த வகையிலே 50வது ஆண்டு பொன்விழா அமைவதையிட்டும், அதனோடு இணைந்து முத்தமிழ் விழாவும். நினைவு மலர் சிறப்பாக வெளிவரவும் எனது மனமுவந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.திரு.X.C.ரஞ்சன்



சுவாமி விபுலாநந்தர் கலா மன்றத்தின்
ஸ்தாபகர்களில் ஒருவரும்,
முன்னாள் கௌரவ செயலாளருமான

**அமரர்.திரு.X.C.ரஞ்சன்**

அவர்களது நினைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Dr.J.A.L.Akalanka Jayasinghe**
MBBS(SL), MS(sl), MRCS(England), MRCS(Edin)
Consultant Orthopaedic Surgeon
D.G.H - Anuradapura

Hartley wishes to Swami Vibulanandar Kazha Mandram for their Golden Jubilee celebration in Matale.

I have participated few free Medical camp which organized by Swami Vibulanandar Kazha Mandram for the needy people. This is one of many precious service what they are doing.

All our best wishes to continue their Social Service.

**Dr.J.A.L.Akalanka Jayasinghe**
MBBS(SL), MS(sl), MRCS(England), MRCS(Edin)
Consultant Orthopaedic Surgeon
D.G.H - Anuradapura



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி



**டாக்டர் சுரேஸ்**
**ஆதார வைத்தியசாலை, கண்டி**

சுவாமி விபுலாநந்தரின் ஐம்பதாண்டு விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மீன்பாடும் தேன் நாடு எனப் போற்றப்படும் மட்டக்களப்பின் காரைதீவில் அவதரித்தவரே முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர். அவர் தம் வாழ்நாள் முழுவதும் துறவறத்தில் நின்று தமிழ் வளர தவம் புரிந்த பெருந்தகை தமிழின் பெருமையை, தமிழிசையின் பெருமையை யாழ் என்னும் பழந்தமிழ் இசைக்கருவியின் பெருமையை உலகறியச் செய்த பெரியார்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக. அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்னும் கூற்றுக்கு ஏற்ப, புகழோடு தோன்றி புகழோடு இன்றும் அவர் நாமம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால் மிகையாகாது. ஈழத்திரு நாடு பெற்றெடுத்த அருந்தவப் புதல்வரில் அழியாச் செல்வமான அடிகளாரின் தமிழ் பணி சொல்லொணா. இவ்வாறான சிறப்புப் பெற்ற அடிகளாரிற்கு ஐம்பதாண்டு விழாவை மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சுவாமி விபுலாநந்தர் சமய, சமூக பணிகளிலும் ஈடுபட்டு பாரியளவில் சேவையாற்றியுள்ளார். இவர் தமிழ் பேசும் மக்களுக்கும் மற்றும் இன, மத, சாதி, சமயம் எனறு பாகுபாடு காட்டாமல் தனது சமூக பணியினை செய்துள்ளார். அதற்கு உதாரணமாக அவர் கட்டியெழுப்பிய பாடசாலைகளே சாட்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் விட்டுச் சென்ற சேவையினை மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம் மேற்கொண்டுவரும் இவ்வேளையில் கலா மன்றத்தினர் நடாத்திவரும் இலவச மருத்துவ முகாம்களில் கடந்த சுமார் எட்டு வருடங்களாக நானும் இன்னும் பல மருத்துவர்களும் சேவையாற்றி வருகிறோம்.

தோட்டப்புற மக்களுக்கும், நகர்புற மக்களுக்குமன்றி கஸ்டப் பிரதேசங்களான முல்லைத்தீவு, தம்புத்தேகம போன்ற பிரதேசங்களில் இலவசமாக மருத்துவ முகாம்களை நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே. சாதி மத பேதமின்றி நாடாத்திவரும் இம்மன்றத்தினருடைய பணியில் சேவையாற்ற கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இப்பணியினை கடந்த காலங்களில் போல் எதிர்காலத்திலும் சுவாமி விபுலாநந்தர் வழியில் நின்று முன்னெடுப்பேன். மக்கள் பணி மகேசன் பணியென்பதற்கிணங்க மன்றத்தாருடன் இணைந்து மருத்துவ முகாம்களை நடாத்த சுவாமி விபுலாநந்தரின் அருளாசி எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், சுவாமி விபுலாநந்தர் கலா மன்றத்திற்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், 50வது ஆண்டு பொன்விழா சிறப்பாக நடைபெறவும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழை நேசித்த சுவாமி விபுலாநந்த அடிகளாரும் மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்ற வளர்ச்சியும்

*கலாபூஷணம் மாத்தளை ராஜ்சிவா சிவலிங்கம்*

இலங்கை மணித்திருநாட்டில் மத்திய பகுதியில் மங்காப் புகழ் பெற்று விளங்கும் மாத்தளை மாநகரிலே மாட்சிமை மிக்க அன்னையவள் வீற்றிருக்கும் அழகுமலை அடிவாரத்தில் அவள் அருள்பெற்று அடியவர்கள் வாழும் இப்புண்ணிய பூமியிலே தமிழ்பேசும் மக்களால் தமிழ் உலகத்திற்கு தன் வாழ்நாள் முழுவதையும் தமிழ் வளர்க்க தன்னை அர்ப்பணித்து இன, மத, பேதமின்றி இமயத்தை எட்டிப்பிடித்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் அடிகளாருக்கு விழா எடுத்து அன்னாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வழிநடக்க இவ்விழா ஒரு உறுதுணையாக அமைவதையிட்டு நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும்.

இவ் வையகத்திலே எமது மகான்கள், ஞானிகள், சமயப்பெரியார்கள் எமக்கான வழிமுறைகளை அருளிச் சென்றுள்ளார்கள். எத்தனையோ பணிகளை அறிமுகப் படுத்தியிருக்கின்றார்கள். ஆனால், இக்காலத்திலே எம்மவர்கள் பணிசெய்யவென வந்து அணிசேர்க்கின்றார்கள். அணிசேர்ப்பதிலேயே காலத்தை வீணாக்குகிறார்கள். ஆனால் அக்காலத்திலே ஞானிகளும், மகான்களும் இதற்கு மாறாக செயல்பட்டு வந்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் எமது அடிகளார் சுவாமி விபுலாநந்தர் தன் வாழ்நாள் முழுவதும் தமிழ் மக்களுக்காக, தமிழை வளர்ப்பதற்காக அரும்பாடுபட்டு பாரிய அளவிலான பணியாற்றி இருப்பதைக் காணமுடிகிறது.

அத்தகைய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகள் தமிழிசை ஆராய்ச்சிக்கு செய்துள்ள தொண்டு அளப்பரியது. இசைத்தமிழில் எவரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் ஆராய்ச்சி நடத்தினார். தமிழ் புலவர்களுக்கு இயலைப்பற்றிய இலக்கணம் தான் தெரியும். இசை இலக்கணம் அறியமாட்டார்கள். இடைக்காலத்தில் இலக்கணம் படித்த பண்டிதர்கள் இசைக்கலையில் நாட்டம் சென்றால் இலக்கணத்தைச் செவ்வனே பயில முடியாது என்ற கருத்தை அன்று கொண்டிருந்தார்கள். இதே போன்று இசைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள் இலக்கணத்தில் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தினால் இசையின் மேன்மை குறைந்துவிடும் என்று எண்ணியுள்ளார்கள்.

இது நமது பாணன் காலத்தின் மரபுக்கு முற்றிலும் மாறானது. ஏனெனில் சங்ககாலத்துப் பாணன் இசையிலும் யாழ் வாசிப்பிலும் வல்லவனாக இருந்தான். கவிதைகள் இயற்றும் புலவனாக இருந்தான் என்று இசைமேதைகள் என்ற தத்துவப் பகுதியில் சுட்டிக்காட்டப்படுகின்றது. இப்படியாக இயலுக்கும் இசைக்கும் இடையே பாலம் அமைக்க எவரும் முன்வரவில்லை.

மேலும் பழந்தமிழிசைக்கும், இப்போது வழக்கத்தில் இருக்கும் இசைக்கும் பெருத்த வேறுபாடு இருந்தது. இத்தருணத்தில் சுவாமி விபுலாநந்தர் அவர்கள் தோன்றி பெரும் ஆராய்ச்சி செய்து "யாழ்நூல்" எனும் நூலை இயற்றியது தமிழிசையுலகத்திற்கு பெரும் பொக்கிஷமாகும்.

பெரும் ஆராய்ச்சியாளனும், புலவன், பண்டிதன், ஆசானும் ஆகிய சுவாமி அவர்கள் பரமஹம்சரது முதற் சீடர்களில் ஒருவரான சுவாமி சிவானந்தரை வணங்கி அருள்பெற்று சமயப்பணியும், தமிழ்ப்பணியும் ஒருங்கே ஆற்றத்தொடங்கியதுடன், ஏனைய இசை நாடகத் துறையினையும், அறிந்து கொண்டவர் இவர். இவை அனைத்தையும், அறிந்து, தெரிந்து தனக்கு மனதிற்கு மிகவும் பிடித்த ஒரு படைப்பாக "மதங்க சூளாமணி" எனும் நூலை வெளியிட்டது தெரிந்ததே.

இதுவரை நாம் அறிந்த வகையில் சுவாமி விபுலாநந்த அடிகளார் ஒருவர்தான் இலங்கை மண்ணிலிருந்து கைலாய யாத்திரை மேற்கொண்ட அருந்தவப் புதல்வன் என்பது குறிப்பிடத்தக்கது. **1932**ம் ஆண்டு பிரபல சமூக சேவையாளரும், சமயத் தொண்டருமாகிய காலம் சென்ற டாக்டர் சோமசுந்தரம் அவர்களின் அழைப்பின் பேரில் (காலம் சென்ற திருவாளர் சோ.பத்மநாதன்) சுவாமி விபுலாநந்த அடிகளார் அவர்கள் மாத்தளை மண்ணில் தன் அடிச்சுவட்டை பதித்து ஒரு நாள் பொழுதை அமரர் சோ.பத்மநாதன் அவர்களின் வீட்டில் கழித்து சென்றுள்ளார் என்பதை அறியும் போது மாத்தளை மாநகருக்கே ஒரு தனிப்பெருமையை தருகின்றது. அடிகளார் அவர்கள் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்கரங்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதத்தின் பிரதியை இப்போதும் காணக் கூடியதாக இருக்கின்றது.

மாத்தளையில் தமிழ் பேசும் இன மக்கள் மத்தியிலும், பாடசாலை மாணவர்கள் சமூகத்திடையேயும், கலைஞர்களிடமும், இலைமறைகாய்கள் போன்று திறமையிருந்தும் சந்தர்ப்பமின்றி இருந்த இயல், இசை, நாடகத்துறையை ஊக்குவித்து வெளிக்கொணர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ஆழ்ந்து சிந்தித்து 1968ம் ஆண்டு ஈழத் தமிழ் பெருமையை இமயம் வரை எட்டச் செய்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் திருநாமத்தை இட்டு "சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம்" என ஒரு சபை அமைக்கப்பட்டது.

இச்சபை ஆரம்பிக்கும் போது, ஆரம்ப கருத்தாக்களில் ஒருவரும், தற்போதைய அங்கத்தவரும் , கலை ஆர்வலருமான திருவாளர் M.முருகையா அவர்கள் ஆரம்பகால தலைவராக நியமிக்கப்பட்டு செயல்பட்டதுடன், செயலாளராக ஆ.கல்யாணசுந்தரமும், தனாதிகாரியாக சதானந்தா பீடி கம்பனி உரிமையாளரின் புத்திரர்களான திரு.பிரகாஸ், திரு.சுரேஸ் ஆகிய இரு சகோதரர்களும் மற்றும் இச் சபை ஆரம்பிபதற்கு மூலகர்த்தாவான அமரர் X.C.ரஞ்சன் அவர்கள் பொறுப்பாளராக செயல்பட்டு, மன்ற வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பைச் செய்ததுடன் காலப்போக்கில் தொடர்ச்சியாக செயலாளராக செயல்பட்டார். மற்றும் திருவாளர் D.சுந்தரவேல்பிள்ளை, (வசந்சுந்தர்), திருவாளர்.ராஜ்சிவா சிவலிங்கம் ஆகியோர் உபதலைவர்களாக செயல்பட்டு வந்தனர்.

அகில இலங்கை சமாதான நீதிவானும், பிரபல வர்த்தகரும், சமூகசேவையாளருமான அமரர்.இரா.தங்கவேல் செட்டியார் அவர்களும் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நேரடி சீடருமான திருவாளர் டாக்டர்.V. பஞ்சாட்சரம் அவர்களும் இச்சபையின் போஷகர்களாக இருந்து செயல்பட்டவர்கள் ஆவர்.

அக்காலத்தில் விஜயாக் கல்லூரி பிரதி அதிபராக இருந்த திருவாளர் அருணாசலம், மற்றும் திருவாளர் சோமசுந்தரம் அவர்களும் ஆலோசகர்களாக இருந்து வழிநடாத்தியதை மறக்க முடியாது. அத்துடன் ஜனாப்.Y.மௌரூப் அவர்கள் கணக்காய்வாளராக அங்கம் வகித்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு புல்லுமலை நல்லரத்தினம் என்பவரின் கைவண்ணத்தில் உருவான சுவாமி விபுலாநந்தரது இரண்டு திருவுருவச்சிலைகள் சபைக்கு கிடைக்கப் பெற்றன, மாத்தளை பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, கலாசார நிகழ்வுகளுடன் அலங்கரிக்கப்பட்ட திருவுருவச்சிலை ஊர்தியில் வைத்து வீதி உலா வந்த ஆரம்ப முத்தமிழ் விழாவை மாத்தளை புனித தோமையர் கல்லூரியில் மிக விமரிசையாக நடாத்தப்பட்டதை நினைவு படுத்துவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

பல்வேறு இன மக்களின் ஒத்துழைப்புடன் இம்மன்றத்தின் உறுப்பினர்கள் அயராது உழைத்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டில் இயங்கி ஆலயங்கள், பாடசாலைகள் மட்டத்தில் பல தரப்பட்ட போட்டிகளில் பரீட்சைகள் நடாத்தி 1968ம் ஆண்டு ஆடித் திங்கள் 28ம் நாள், நான் முன்னம் கூறியது போல் சுவாமி விபுலாநந்தர் நினைவு தின விழாவை வெகு விமரிசையாக வெளியூர் அறிஞர்கள் முன்னிலையில் நடாத்தியும்,போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள், கலைஞர்கள், மருத்துவர்கள், ஊடக துறையினர் அனைவரும் பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள் என்பதனை அடிகளார் நாமத்தில் ஒலிக்கும் புகழ் சுவாமி விபுலாநந்த கலா மன்றத்தையே சாரும்.

இப்படிப்பட்ட மாமேதை சுவாமி விபுலாநந்தர் பிறந்த மண் ஈழமணித்திருநாட்டின் கிழக்கில் இருக்கும் பொன்னகரம் மட்டக்களப்பு. சூரியன் கிழக்கிலே உதித்து தனது செங்கதிர்களை உலகம் எங்கும் பரவ விடுகின்றான். அதைப்போல் இலங்கை மணித்தீவின் மட்டு நகரிலே மீன்கள் பாடுகின்ற தேனமுது இசையின் மகத்துவத்தை அகிலம் அனைத்தும் புரிந்து கொண்டு அந்த இன்ப நுகர்ச்சிக்குப் புகழாரம் சூட்டுகிறது. “நெய்தல்” அழகு பாவாடை கட்டி அலைபாய்ந்து ஆடிவரும் இந்த மண் எத்தனையோ கவிஞர்களை, கலைஞர்களை, எழுத்துலக சிற்பிகளை ஏன் நாவலர்களைக்கூட ஈன்றெடுத்து மகிழ்வு கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணி பெரியதம்பி பிள்ளை, பண்டிதமணி கணபதிபிள்ளை, கவிஞர்கள் திமிலைத்துமிலன், திமிலை மகாலிங்கம், அன்பு முகைதீன். "தீ" புகழ் எஸ்.பொன்னுதுரை. பல்கலை வல்லுநர் செ.குணரத்தினம். முன்னைய "தினபதி" பத்திரிகை ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் தமிழை இனிமையாகப் பேசி வெற்றிகள் பல கண்ட முன்னாள் அமைச்சர் சொல்லின் செல்வர் செ.இராசதுரை உள்ளத்தை ஈர்த்தெடுக்கும் பேச்சுத்திறன் கொண்ட ஜனாப் ஏ.ஆர்.எம்.ஜிப்ரி அடுக்கு மொழி பேச்சாளர் சிவஸ்ரீ.வை.சி.காந்தன் குருக்கள் இவர்கள் எல்லோரையும் உருவாக்கிய இந்தப் புண்ணிய பூமியின் மாண்புக்கு எல்லையே இல்லை.

ஆனால் இவர்கள் அனைவரையும் ஒருபடிமேல் நின்று கிழக்கிலே தோன்றிய ஞாயிறு என ஒளிபரப்பிய உன்னத மகான்தான் சுவாமி விபுலாநந்த அடிகளார். ஆசிரியராய், அதிபராய், பேராசிரியராய், இறுதியில் துறவியாய் கடல் கடந்த நாடுகளில் மட்டுமல்லாமல் இந்திய மண்ணும் மரியாதைக் குறிய அறிஞராய் மனமுவந்து ஏற்றுக்கொண்ட மாமேதைதான் "சுவாமி விபுலாநந்தர்" அவர்கள்.

சுவாமி விபுலாநந்தர் ஒரு மாவட்டத்திற்கோ, ஒரு நாட்டுக்கோ சொந்தமானவர் அல்லர். முழு உலகத்திற்கும் சொந்தமானவர் என்பதே சிறப்பாகும். மனித நேயத்தின் அடிப்படையில் அனைத்து மக்களின் நல்வாழ்வுக்காகவும், மேம்பாட்டுக்காகவும், வாழ்ந்த ஏனைய உலகத்தலைவர்களைப் போல் இவரும் தனது காலத்தில் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு குரலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வும் கொடுத்து, ஒன்றே உலகம் ஒன்றே மனிதகுலம் என்ற நோக்கத்தோடு தமது கருத்துக்களை சமய சமரசம், சமதர்மம், வாழ்வு, சகோதரத்துவம் என்ற கோட்பாட்டில் உருவான ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து புனித இலட்சியங்களுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

"என்னை இறைவன் இங்கே படைத்தனன்
தன்னை உணர்ந்து தமிழ் செய்வதற்கே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அமுத வார்த்தைகளுக்கிணங்க தமிழாசானாகக் கலைகளின் பூரண வடிவத்தை யாவருக்கும் நுகர்ந்து அனுபவிக்கச் செய்தவர் சுவாமி விபுலாநந்தர் அடிகளார். அவர் யார்த்த யாழ்நூல் மீன்பாடும் தேனாட்டு வாவிகளிலே பூரணைக்குப் பிறகும் வானமகள் நிதர்ஷனமாக இருக்கும் போது, நீரினுள்ளே எழுகின்ற அற்புதமான இசையின் பூரணத்துவத்தை அழகுபட எடுத்துக்காட்டுகிறது. சுவாமி அவர்கள் பழைய யாழ் கருவியினை இயக்கி அழிந்துபோன பண்டைய இசையின் இலக்கணங்களை அக்காலத்திலேயே வகுத்தளித்தவர். பகவான் இராமகிருஷ்ணரின் பெயரால் அக்காலத்திலேயே இயங்கிய அமைப்பிலே ஓர் துறவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

இராமகிருஷ்ண சங்கத் துறவியாக விளங்கிய இவர் யாழ்ப்பாண வைத்தீஸ்வர வித்தியாலயம், திருமலை இந்துக்கல்லூரி, கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம் காரைதீவு சாரதா வித்தியாலயம் போன்ற பல பாடசாலைகளை நிறுவி அனாதை மாணவர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், கொடுத்து கல்வி புகட்டி ஏழை மாணவர்களையும் மனிதராக்கிய மாமேதை ஆவார்.

இவர் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை கொஞ்சி மகிழ்ந்தார். அதன் பயனாக யாழ் நூலை எமக்களித்தார். இப்பெருமகன் ஓர் பாவலராகவும், நாவலராகவும் சிறந்ததோர் எழுத்தாளராகவும் விளங்கினார். அடிகளாரிடம் இருந்த ஆற்றல்களோ அனேகம். பிறந்த நாட்டிற்கும், பிறநாடுகளுக்கும் சிறப்பான, (சிறப்பாகவும்) தொண்டாற்றிய பெருமகன் ஆவார். அப்படிப்பட்ட அடிகளாரின் அரிய தொண்டினை மதித்து மக்கள் சிலை அமைத்து விழா எடுக்கின்றனர் இன்று.

சிவநெறியும் செந்தமிழும் புரிந்த தவப்புதல்வனே வித்தகர் விபுலாநந்த அடிகளார். வடநாட்டிலே விவேகாநந்தரைப் போலவும், நல்லூரிலே ஓர் நாவலரைப் போலவும் மீன்பாடும் எமது கிழக்கிழங்கையிலே ஓர் சமுதாயப் புரட்சியை உண்டாக்கியவர் அடிகளார் அவர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம், மொழி, தமிழிசை, கீழத்தேய நாடகங்கள் மேலத்தேய நாடகங்கள், பழந்தமிழ் நூல்கள், சகலவற்றையும் துருவித் துருவி ஆராய்ந்து இயல், இசை, நாடகங்கள் என்பனவற்றை ஆய்வு செய்வதிலும், வல்லுனராக விளங்கினார். அப்படிப்பட்ட வல்லுனரின் ஆய்வுத் திறனில் வெளிவந்த எழுத்து நூல்களே கணேசதோத்திரம், மதங்க சூளாமணி, யாழ் நூல் எனும் பெரு நூல்களாகும். அடிகளாரின் ஆய்வுத் திறனுக்கு மகுடம் சூட்டும் நூலாக அமைந்தது தான் "யாழ் நூலாகும்".

பெருமதிப்பிற்குரிய சிவானந்த சுவாமி அவர்கள், இந்த மயில்வாகனன் என்கின்ற இளந்தளிர் "சுவாமி விபுலாநந்தர்" ஆவதற்குக் கொடிகாட்டியவராவார். **1924**ம் ஆண்டு சித்திரை பௌர்ணமி நாளன்று காவியுடைகளைத் தனது பொற்கரங்களால் வழங்கினார். ஞான உபதேசம் செய்தார். அந்தப் பேறுதான் நமது அழகுத் திருநாட்டில் பாடசாலைகள், கல்லூரிகள், ஏழைச் சிறுவர் விடுதிகள், இராமகிருஷ்ண நிலையங்கள் தழைப்பதற்கு வித்திட்டது.

அது மட்டுமா? சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ் பேராசிரியரான சுவாமி விபுலாநந்த அடிகளார், இலங்கையிலும் ஏலவே பல்கலைககழகக் கன்னித் தமிழ் பேராசிரியராகத் தனித்துவம் பெற்று மிளிர்ந்தார்.

மட்டக்களப்பு தென்கோடியில் உள்ள காரைதீவு எனும் நெய்தலும், ஒருங்கே அமையப்பெற்ற பழந்தமிழ்க்கிராமத்தில் அறிவியல் கலைஞராக, ஆத்மிக ஞானியாக, ஆற்றல்மிகுபேராசிரியராக, இசைத்தமிழ் ஆராச்சியாளனாக நாடகத்தமிழ் நல்லாசிரியராக நமது தாயக மண்ணிலே அவதரித்து நற்பணி புரிந்த அகிலம் போற்றும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாந்தர் அடிகளாரின் வரலாற்றுக் குறிப்புகளை பார்ப்போமாகில் **1892**ம் ஆண்டு அதாவது **1892-03-27**ம் திகதி சுவாமி விபுலாநந்தர் அவதரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவர் பிறந்த இடம் காரைதீவு கிராமம்
- இயற்பெயர் தம்பிப்பிள்ளை
- கதிர்காமத்தில் வைத்து சூட்டப்பட்டபெயர் மயில்வாகனன்.
- அவரது குலதெய்வம் கண்ணகி அம்மன்
- தந்தைபெயர் சாமித்தம்பி
- தாயின்பெயர் கண்ணம்மை

- **1898ம் வருடம்**

ஆரம்ப கல்வியை ஆரம்பித்தார் ஆரம்ப பாடசாலை தொடர்ச்சியாக, மேற்கொண்ட பாடசாலைகள் மெதடிஸ்ட் பள்ளி பாடசாலை மட்டக்களப்புக்கல்லூரி.

- **1902ம் ஆண்டு**

கற்ற பாடசாலை அர்ச் மிக்கேல் கல்லூரி

- **1916ம் ஆண்டு**

மதுரை தமிழ்ச் சங்க பண்டிதர் - தேர்வில் தெரிவானர்.

- **1919ம் ஆண்டு**

இலண்டன் பல்கலைகழகத்தின் பி.எஸ்.சி பரீட்சையில் தேர்வானார்.

- **1924ம் ஆண்டு**

இராமகிருஸ்ணர் சங்கத்தில் சேர்ந்தார். அச்சங்கத்தில் "பிரபோத சைதன்யா" எனும் நாமம் பெற்றர்.

- **1924ம் ஆண்டு**

சித்திரை பௌர்ணமி தினத்தன்று துறவறம் மேற்கொண்டு "சுவாமி விபுலாநந்தர்" எனும் பெயர் பெற்றர்.

- **1925ம் ஆண்டு**

சிவானந்த வித்தியாலம், சாரதா மகளிர் கல்லூரி மற்றும் ஆதரவற்ற மாணவர்களக்கு இல்லங்கள் நிறுவி வடகிழக்கிலும், மலையகத்திலும் கல்வித் தொண்டு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **1943ம் ஆண்டு**

இலங்கை பல்கலைகழகத்தில் முதல் தமிழ் பேராசிரியரானார்.

➢ **1947ம் ஆண்டு**

யாழ் நூலை உவந்தாளித்தார்.

➢ **1947ம் ஆண்டு**

20.06.1947 / 21.6.1947 ஆகிய இரண்டு நாட்களில் (வெளியீடு) யாழ்நூழ் அரங்கேற்றப்பட்டது.

➢ **1947ம் ஆண்டு**

அதாவது 19.07.1947ம் திகதி அடிகளார் இறையடியெய்தினார்.

இத்தகைய ஒரு பெருமகன் நமது மத்தியில் தோன்றி வாழ்ந்தது பெருமை சேர்ப்பதாகும்.

அன்று சுவாமி விபுலாநந்தர் பிறந்திராவிட்டால் இன்று நமது தாய்த்திருநாட்டில் கல்லூரிகள், தொண்டர் ஸ்தாபனங்கள் எதுவுமே உருவாகியிருக்கமாட்டாது. எனவே விபுலாநந்தர் தமிழுக்கும், இந்துமத உயர்விற்கும் பாடுபட்ட என்றும் போற்றப்பட வேண்டிய ஒரு வரலாற்று நாயகன். அதனால் தான் இந்த மரியாதைக்குரிய மகானை கௌரவப்படுத்த இலங்கை அரசு 1979ம் ஆண்டு அவர் நினைவாக முத்திரை வெளியிட்டது. இது தமது நெஞ்சங்களை நெகிழ வைத்தது.

அதுமட்டுமல்ல, இன்று நமது இலங்கைத்திருநாட்டில் தமிழ்மொழி மூலப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் அரசாங்கத்தால் நடாத்தப்படும் தமிழ்த்தினப் போட்டிகள் யாவும் சுவாமி விபுலாநந்தரின் நினைவாகவே நடாத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இது மட்டுமா இன்று மட்டு நகரிலே அமைந்துள்ள விபுலாநந்த இசைக்கல்லூரியை நம்மால் இலகுவில் மறந்துவிட முடியாது. மொத்தத்தில் சுவாமி விபுலாநந்தர், பகவான் பரமஹம்ஷருக்குப் பிறகு எமது திருநாட்டுக்கப் பெருமை தந்தவர். அதனால் அந்த நல்ல ஆத்மா புனிதத்துவம் பெற்ற பின் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதியின் மேலே பொறிக்கப்பட்டுள்ள அமுத வாசகமானது...

"வெள்ளைநிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது"

என அங்கே வடிக்கப்பட்டிருக்கும் பதிகத்தை போவோர், வருவோர் அனைவரது மனங்களிலும் சாந்தி நிலவச் செய்கிறது. இந்தக் கருத்தாழம் மிக்க "தமிழாரம்" என்றும் வாடா மலர்களாக மணங்கமழ்ந்து கொண்டு சுவாமி விபுலாநந்தர் என்கின்ற செங்கதிரோனை எந்நாளும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறது.

இத்தகைய ஒரு பெருமகன் நமது மத்தியில் தோன்றி வாழ்ந்தது நமக்குப் பெருமை சேர்ப்பதாகும். இன்று குறுகிய இனவாதங்களால் நமது நாட்டில் ஒற்றுமை, அமைதி என்பது நிர்க்கதியாகி நிற்கும் சூழலில் சுவாமி விபுலாநந்தரது நினைவுகள், அவரது சிந்தனைகள், வாழ்வு நெறி முறைகளை மீட்டுப்பார்ப்பது மிகவும் பொருத்தமானது. மதங்களை, இனங்களை கடந்த மனித நேசிப்பு இன்றைய சமூகத்தின் அவசரத் தேவையாக உள்ளது. சுவாமி விபுலாநந்தரது பெருமைக்குரிய நினைவுகள் நிகழ்காலத் தலைமுறைக்கு நிச்சயமாக வழிக்காட்டக் கூடியன.

**1947**ம் ஆண்டு ஆடி மாதம் **19**ம் திகதி தமிழ் மக்கள் மறக்க முடியாத சோகதினம். அன்று தான் எமது முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் அடிகளார் மரணத்திரையுள் மறைந்தார். காலன் ஓர் தேசப்பக்தனைக் கவர்ந்து சென்றான். தமிழ் அன்னை தன் தவப்புதல்வனை இழந்தாள். அவர் இறந்துவிட்டார் என்று கூறுகிறோம். அது பொய். அவரது பூதவுடல் மறைந்ததே ஒழிய புகழ் உடல் பாரெங்கும் பரந்து நிலவுகின்றது. தமிழ் வாழும் வரை முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார் வாழ்வார். வாழ்ந்துகொண்டே இருப்பார். இன, மத, மொழி, வித்தியாச பேதங்களுக்கு அப்பால் வாழ்ந்த பெரும் மாமனிதர் சுவாமி அவர்களின் அடிச்சுவட்டை பின்பற்றி அவர் வழி நடப்போமாக.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை



# கிழக்கிலங்கை ஈன்றெடுத்த தவப்புதல்வன்

என்.அருளானந்தம் S.L.E.A.S, M.A. PGDE(MERIT), M.ED ( பிரதிக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு))

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள காரைதீவு என்னும் ஊர் ஈன்றெடுத்த ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் தமிழ்நாடறிந்த ஏடறிந்த முத்தமிழ் வித்தகர். கவிச் சக்கரவத்தியெனப் போற்றப்பட்டவர். இவர் உலகம் உவப்ப வாழ்ந்தவர். ஞானத்தமிழ் துறவி. இப்படிப்பட்ட ஒருவருக்கு மலையகத்தின் மாத்தளையில் வருடம் தோறும் ஒருவிழா வென்றால் மனம் குளிரும் அல்லவா?

சுவாமி விபுலாநந்தருக்கு விழாவெடுப்பதுடன் அமையாது அடிகளாரின் நூல்களை வாசிப்பது, கவிதைகளை படித்தின்புறுவது கட்டுரைகளை வாசித்து அதிலுள்ள உண்மைகளை கண்டறிவதும் நம் கடமையல்லவா? அத்தோடு அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும் அறிந்து கொள்ளவும் வேண்டும்.

இவர் *03.05.1892*ம் ஆண்டு பிறந்து *19.07.1947* இல் இறையடி எய்தினார். இவ்வுலகில் வாழ்ந்த காலமோ ஐம்பத்தைந்து ஆண்டுகள். ஆயினும் இக்காலத்தே அவர் சாதித்தவை பலப்பல. ஒரு விஞ்ஞானப்பட்டதாரியான இவரை பட்டங்களும் பதவிகளும் தேடி வந்தன. அவ்வேளையில் தமிழுக்கு சைவத்துக்கும், சமூகத்திறக்கும் செய்த தொண்டுகள் அளப்பரியது.

ஐம்பத்தைந்து ஆண்டு காலத்தே அடிகளாரது வாழ்க்கையில் நிகழ்ந்தவை எத்தனையோ, அவர் சாதித்து விட்டவை எத்தனையோ, நடமாடி வாழ்ந்து இடங்கள் எத்தனையோ பழகிய நண்பர்கள் எத்தனையோ, நனவாக்கிவிட்ட கனவுகள் எத்தனையோ, இவற்றையெல்லாம் நாமும் தேடி அறிந்து எம்வாழ்வையும் வளப்படுத்த வேண்டும்.

" விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பர் சுவாமி விபுலாநந்தரின் இளமைப் பெயர் மயில்வாகனம் இளமைக் காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி பற்றி காரைதீவு ஆசிரிய நண்பர்கள் கூறியதாவது. "ஒரு நாள் சிறுவன் மயில்வாகனனின் வகுப்புக்கு ஒரு பாதிரியார் வந்தார். அவர் மாணவர்களைப் பொதுவாக நோக்கி உங்களில் ஒவ்வொருவர் முன்னும் கடவுள் தோன்றி" உனக்கு என்ன வரம் வேண்டும்? என வினவினால் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதனை வரமாகக் கேட்பீர்கள் என்று கேட்டார். ஒரு மாணவன் நல்ல கல்வியைத் தரவேண்டும் என்று கேட்பேன் என்றான். இன்னொருவன் ஏராளமான செல்வத்தை வரமாக்க கேட்பேன் என்றான். இவ்வாறு சில மாணவர்கள் தங்கள் விருப்பங்களை வெளியிட்டார்கள். மயில்வாகனன் முறை வந்தது. அவர் கம்பீரமாக எழுந்து நின்று " இந்த நாட்டு மக்களுக்கு தொண்டு புரிவதற்கு தேவையான ஆற்றலைத் தரவேண்டும்" என்று கடவுளிடம் வரம் கேட்பேன் என்றார். பாதிரியார் அவரை மனமார வாழ்த்திவிட்டு சென்றார். ("நன்றி வ.சிவசுப்பிமணியம் B.A "விபுலானநந்தர் தரிசனம்")

அவரின் இளமைக் கனவுகளைப் பாருங்கள் நாட்டு மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டும். அந்த நினைவுதான் தமிழ் தொண்டு சமயத் தொண்டு சமூகத்தொண்டும் செய்ய வைத்தது.

இவர் கிழக்கிலங்கைக்கு பெருமை தேடிக் கொடுத்தார். தலைநகரத்தின் மட்டக்களப்பின் எல்லைகள் அரசியல் காரணங்களால் மாற்றம் பெற்றுள்ளது. இன்று இவர் பிறந்த காரைதீவு அம்பாறை மாவட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மட்டகளப்பின் எல்லைகள் அரசியல் காரணங்களினால் மாற்றம் பெற்றுள்ளது. மட்டகளப்புக்கு மீன்பாடும் தேனாடு என்ற பெயரைப் பெற்றுக் கொடுத்தவரும் சுவாமிகளே ஆகும்.

சுவாமி விபுலாநந்தர் இயல்பாகவே தமிழ் மீது தீராத பற்றுக் கொண்டவர். தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதினார். இவரின் ஆற்றலை உணர்ந்த அண்ணாமலைப் பல்கலைகழகத்தினர் தங்கள் பல்கலைகழகத்தில் முதல் தமிழ் பேராசிரியராக இவரை நியமித்தனர். இவர் அங்கு பணியாற்றிய காலம் பாரத நாட்டில் சுதந்திர வேட்கை தீவிரமடைந்த காலம். மகாகவி பாரதியாரின் சுதந்திர வேட்கை ததும்பும் பாடல்களைப் அடிகளாருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு . பாரதியாரின் பாடல்களைப் பாடுவதற்கே பலர் அஞ்சிய வேளையில் வழிப்படுத்தினார். அவரது பாடல்களின் சிறப்பினை எடுத்துரைத்துப் பாரதியின் பெருமையைப் பறைசாற்றிட வேண்டுமென மாணவர்களைப் வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி பாரதியின் கவித்துவ ஆற்றலை வெளியுலகுக்கு எடுத்துக்காட்டியவர் எங்கள் நாட்டை சேர்ந்த விபுலாநந்த சுவாமிகள் என்பதில் எங்களுக்கும் பெருமைதான். பக்தி என்பது இறைவன் மீது ஆன்மா கொள்ளுகின்ற தீராத காதல். அத்து மீறிய காதல். இறைவன் மீது ஆன்மா கொள்ளுகின்ற அக்காதலையும் தூய்மையாகக் கொள்ள வேண்டும் . வெறும் பூக்களையும் பொங்கலையும் படைத்து வழிபடுவதும் பக்திதான். ஆனால், இறைவன் விரும்புவது உள்ளக்கமலமும் கூப்பிய கைககாந்தளும் நாட்ட விழிநெய்நதலும் என்பதை பின்வருமாறு சுவாமிகள் விபுலாந ந்தர் பாடியிருக்கிறார்.

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ள லடியினைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

"காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழநீர்த் தொடையுமல்ல
கூப்பிய கைக்காந்தளடி கோமகனார் வேண்டுவது"

பாட்டாளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டாளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது"

இப்பாடல்களில் உள்ளமாகிய கமலம், கூப்பிய , கைக்காந்தள் ,நாட்டவிழி நெய்தல் ஆகிய மூன்று மலர்களையே ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்று என்பதைக் காட்டியுள்ளார்

கவிதை என்பது "அழகிய சொற்களில் அடுக்கு " என்றும் கூறுவர். அவ்வகையில் அடியளாரின் கவித்துவ ஆற்றலுக்குச் சான்றாக மற்றுமொரு கவிதை "கங்கையில் விடுத்த ஓலை " ஆகும். இவரின் உண்மைத் தோழன் கந்தசாமிப் பெரியோர் ஆவார். இவர் ஒருமுறை வடநாடு சென்ற வேளையில் கந்தசாமிப் பெரியோரையம் சந்திக்க வேண்டும் என்று அறிவித்துவிட்டார். அவ்வேளையில் கந்தசாமிப் பெரியோர் திடீரென இறைபதம் எய்தினார். அது அறிந்த சுவாமி விபுலாநந்தர் கவலை அடைந்தார். தனது முகவரியை ஏற்கனவே கந்தசாமிப் பெரியோர் பெற்றிருந்தும் தனக்கு ஓலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் எழுதாமல் திடீரென மறைந்து விட்டார் அதனால் கலங்கிய அவருக்கு ஓலை எழுத ஆவல் கொள்கிறார். ஓலையும் எழுதியும் விட்டார். எந்த முகவரிக்கு அனுப்புவது என்று சிந்தித்தார்.அவர் சொர்க்கத்தில் இருப்பார். கங்கை நதி அங்கிருந்து தான் வருகிறது. ஆகவே, கங்கையில் விட்டால் தான் தோழனிடம் சென்று சேர்த்துவிடும். என்று நம்புகிறார். அப்படிச் செய்தார். அதைப் பின்வருமாறு கவிதை மூலம் வடிக்கிறார்.

"தோற்றுவதும் மறைவதும் தொல்பியல்பென் றுணரத்
துயரகன்ற தெனினுமன்புத் தொடரகால மையினால்
மாற்றமொன்று முரையாது வான்புகுந்தாற் கோலை
வரைவனென அன்பு பொதி வாசகங்கள் எழுதி
அறிவற்றங் காக்கு மெனு மறவுரையை எழுதி
அறநெறியா லின்பறுமென் றுறுதிப்பா டெழுதி
ஓதுவிபு லாநந்த னுரையிவையென் மென்றெழுதி"

அதனை அனுப்ப முற்படுகிறார்.

செல்வமலி விண்ணாட்டிற் செழுங்கலைத்தெய் வம்வாழ்
திருநகரில் தமிழ் வழங்குந் தெருவிலொரு மனையில்
அல்லலின்றி வாழ்கின்ற கந்தசாமிப்பே
ரறிஞனுக்கிவ் வோலையென அடையாளம் பொறித்தேன்.

இக்கவிதையில் விண் உலகிலே கலைத்தெய்வம் வாழும் நல்ல நகரில் தமிழ் வழங்கும் தெருவொன்று உண்டு. அத்தெருவில் உள்ள ஒரு வீட்டிலே துன்பமின்றி அமைதியாக வாழ்கின்றான் கந்தசாமிப் பெரியோன் அவனுக்குரியதாகும் என முகவரி இட்டார்.

தற்காலத்தில் ஆராய்ச்சிபடிப்புத் தான் முக்கியம் . சுவாமிகள் இதிலும் இடம் பிடித்துள்ளார். சுவாமி விபுலாநந்தர் அக்காலத்தில் உணர்ந்தவராக ஆராய்ச்சி செய்து கட்டுரைகள் பல எழுதியுள்ளார். அவரின் ஆராய்ச்சித் திறனுக்கு "யாழ்நூல்" சான்று பகிர்கின்றது. யாழைப்பற்றி ஆராய்ந்து அழியாச் செல்வமாக இந்நூலை தமிழ் உலகுக்குத் தந்துள்ளார்.

ஆரம்ப காலங்களில் "கூத்து" என்பது ஒரு நிகழ்வை மக்கள் மனதில் பதிய வைக்கும் கருவியாகப் பயன்படுத்தியுள்ளனர். கூத்து வளர்சியடைந்த நாடகமாக உருவெடுத்தது என்று குறிப்பிடுகின்றனர். அவ்வகையில் சுவாமி விபுலாநந்த அடிகளாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்துள்ளார். நாடக உலகுக்கும் தன் பணியைச் செய்ய வேண்டும் என்று "மதங்க சூளாமணி" என்னும் நூலை ஆக்கி எமக்களித்துள்ளார்.

மொழி பெயர்ப்புக் கலையும் முக்கியமானதாகும். அடிகளார் அக்கலையிலும் சிறந்து விளங்கியுள்ளார். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை மூலப்பிரதியைப் பார்க்கவும் சிறந்து விளக்கியுள்ளார்.

இது அவரது மொழிப் பணியை எடுத்துக்காட்டுகின்றது. உதாரணமாக அவர் மொழி பெயர்ப்புக்கு ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மொழிபெயர்த்துள்ளமையைக் குறிப்பிடலாம். "அஞ்சினவர்க்கு சதமரணம் அஞ்சாத நெஞ்சாத்து ஆடவனுக்கு ஒரு மரணம் என்று மொழிபெயர்ப்பைக் காட்டலாம்.

அஞ்சினர்க்குச சதமரணம் அஞ்சதா நெஞ்சத் (து)
ஆடவனுக்கு ஒரு மரணம் அவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவர் என் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன்மதிமூ டரைக்கண்டாற் புன்னகை செய் பவன்யான்
இன்னுலும் யானும் பிறந்த தொருதினத்தில் அறிவார்,
இளஞ்சிங்கக் குருளைகள்யாம் யான் மூத்தோன் எனது
பின்வருவது இன்னல்எனப் பகைமன்னர் அறிவார்
பேதுறல் பெண்ணங்கே யான் போய்வருதல் வேண்டும்

எனக் கூறினார்.

கற்றாரே முகத்தில் கண்ணுடையவர் என்றார் வள்ளுவப் பெருந்கை. அதற்கிணங்க சுவாமி விபுலாநந்தரும் கல்விப்பணியும் செய்துள்ளார். அவையும் ஈடு இணையற்றவை. மாணவர்கள் கல்வித்துறையில் நாட்டம் கொள்வதன் மூலம் தான் நமது சமுதாயம் முன்னேற்றம் அடைய முடியும் என்பதை உணர்ந்தவர் இவராவார். இதன் பொருட்டு வட, கிழக்கு மாகணங்களில் பல பாடசாலைகள் உருவாக்க அவா கொண்டிருந்தார். இராமகிருஸ்ண சங்கத்தின் மூலம் பாடசாலைகள் தோன்றுவதற்கு மூல காரணமாக இருந்தவர் சுவாமிகள் ஆவார்.

மட்டக்களப்பில் சிவானந்தா வித்தி யாலம், யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி, திருகோணமலையில் இராமகிருஸ்ண இந்துக்கல்லூரி, காரைதீவில் விபுலாநந்த வித்தியாலம் என்பன அடிகளாரின் கல்விப் பணிக்கு சான்று பகர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிக்கு கம்பர் என்றால் உரைக்கு சுவாமி விபுலாநந்தர் ஆவார். அடிகளாரின் கட்டுரைகளும் உரைகளும் அவரது இலக்கியப் புலமைக்கு சான்றாகின்றன. நாங்களும் அவரின் கட்டுரைகளையும் உரையையும் வாசித்து பயனடைவோமாக.

மேல் காட்டியவாறு சுவாமிகளின் பணிகள் காணப்படுகின்றன. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் தொண்டாற்றியவரை முத்தமிழ் வித்தகர், முத்தமிழ் முனிவர் என்று அறிஞர்கள் போற்றுகின்றார்கள். ஈழம் தொட்டு இமயம் வரை இவரின் புகழ் பரவியதோடு இன்று உலகம் முழுக்க இவர் புகழ் மணம் வீசுகின்றதை மக்கள் அறிவர்.

இப்படியான சிறப்புப்பெற்ற அடிகளாருக்கு மாத்தளை மாநகரமும் விழா எடுத்து மகிழ்ந்து சிறப்பிப்பது மகிழ்வுக்குரியதாகும். பாடசாலைகள், தோறும் அன்னாரின் உருவச் சிலைகளை நிறுவியும் போற்றுவோம். சுவாமி அவர்கள் ஈழநாட்டுக்கு பெருமை தேடித்தந்தவர். அவரின் புகழ் தமிழ் உள்ளவரையும் உலகம் உள்ளவரையும் நிலைத்து நிற்கும்.


உசாத்துணை நூல்கள்

01. விபுலாநந்தர் தரிசனம்
வ.சிவசுப்பிரமணியம் B.A
மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை
1993

02. சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள் தொகுதி 1, 2, 3, 4

03. கவிஞர் த. துரைசிங்கம் B.A (Hons) PGDE SLEAS
கட்டுரை மலர்
உமா பதிப்பகம் கொழும்பு - 06





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## " புதுமைக் கடவுள் ஆசானே "

**கலாபூசணம் மாத்தளை ராஜ்சிவா**

பள்ளிக்கூடம் போகலாம்
பாடம் கற்று நாம் வரலாம்
சொல்லித்தருவார் நமது குரு
கருணைக்கடலாம் பெருந்தேவன்

அற்புத தமிழும் ஆங்கிலமும்
அத்துடன் கணக்கும் அறிவியலும்
பொது அறிவோடு போதிக்கும்
புதுமைக் கடவுள் ஆசானே

காலை எழுந்து குளித்திட்டு
கடவுள் தொழுகை வணங்கிட்டு
சாலையோரம் பள்ளிக்கு
சென்றோம் சங்கடமில்லாம்

வானல் நறுக்கி வாழ்வு தரும்
வாத்தியார்தானே நம்தெய்வம்
தேவையறிய பெற்றோரே
இலவசமாய் செய்ததுபோல் - பள்ளிக்கு
ஊர் பொதுமக்கள் உதவிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர்*
*நினைவு விழா இனிதே நிறைவேறவும்*
*பொன்விழா சிறப்புமலர் சிறப்பாக*
*வெளிவரவும்*
*எமது இதயங்கனிந்த*
*நல்வாழ்த்துக்கள்*

வாழ்த்துவோர்.
K.S.கணேஸ் குடும்பம்
இல : 174-6/10, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12



*செல்வி.விதுஷாலினி கணேஸ்*

# முத்தமிழ் " பொன் விழாவில் " கௌரவிக்கப்படும் மன்ற அங்கத்தவர்களின் விபரம்

சமய சமூகப்பணி



**திரு.யோகராஜா செட்டியார்**
( மன்ற உப செயலாளர்)

கல்விப்பணி



**திரு. சதாசிவம் ஸ்ரீதரன்**
( மன்ற உறுப்பினர் )

ஊடகப்பணி



" ஊடகச் செம்மல் "
**திரு.ஆறுமுகம் சுதாகரன்**
( மன்ற உறுப்பினர் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கவிதை

## வாழ்க விபுலாநந்தர் திரு நாமம்...



*திரு.K.திருநாவுகரசு – மன்ற உறுப்பினர்*

மட்டு நகர் ஈன்றெடுத்த மாணிக்கமாம்
மயில்வாகனனார் எம் விபுலாநந்தர்
மாண்பதனை பறைசாற்றும்
மாத்தளை விபுலாநந்தர் கலா மன்றமே..!

ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்தொட்டில்
ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகள்
கடந்த உன் சேவைகள்
காலமெல்லாம் அழியாது வாழ்த்துகிறேன்

மாத்தளை மண் தன்னில் - முறையாக
முத்தமிழை வளர்த்திடவே
வருடாந்தம் இயல், இசை, நாடக போட்டிகளை நடத்தி
வரும் உன் பணியை வாயார வாழ்த்துகிறேன்...

ஏழை எளியவர் நோய் தீர்த்து
ஏழ்மை அகற்ற நீ செய்த - இலவச
மருத்துவ முகாம்களையும் - வழங்கி வைத்த
மருந்துகளையும் மாண்புடனே வாழ்த்துகின்றேன்...

பொன் விழா காணும் இந்நன்நாளில்
பொழிவோடு வெளியாகும் - முத்தமிழ் விழா
சிறப்பு மலரே நீ சீரோடு பார்போற்ற
சிறப்புறவே சிந்தை மகிழ வாழ்த்துகிறேன்..!

வளர்க தமிழ் பணி... வாழ்க உன் நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவ பண்புகளை வளர்ப்பதில் பாடசாலைகளின் பங்களிப்பு

**M.H.A.M.இஸ்மாயில் SLAS**
**Dip.in.Sch Mgt, MA, PGDEM – ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர்**

பல்வேறு குடும்பச் சூழல்கள், நடத்தை வேறுபாடுகள், பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள் என்பவற்றால் வேறுபட்ட பிள்ளைகளை உள்வாங்கி, அவர்களை ஒழுங்கபடுத்தி நாட்டினதும், சமூகத்தினதும் தேவைகளுக்கு ஏற்பவும், பொது வாழ்க்கைக்காகவும் தயார்படுத்தி அனுப்பும் பணியை பாடசாலைகள் செய்கின்றன.

இதற்கென எழுதப்பட்ட பாடவிதானங்கள், எழுதப்படாத விழுமியங்கள், கலாசாரங்கள், மரபுகள் என்பன பாடசாலைகளில் நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு திட்டத்தின்கீழ், அரசின் கண்கணிப்பு மேற்பார்வை சட்டதிட்டங்கள் என்பனவற்றின் கீழ் இயங்குகின்றன.

அரசின் திட்டமிட்ட இச்செயற்பாடுகள் நூறு வீதமும் நிறைவேறுதில்லை. எனினும் திட்டமிட்ட செயற்பாடுகள் எதிர்பார்க்கப்படும் அடைவுகள் என்பன உள்ள படியால் இலக்கை நோக்கிய பயணம் பாடசாலைகளில் தொடர்வதால் நோக்கித்தை ஓரளவுவேனும் அடைய முடிகிறது.

பாடசாலைச் செயற்பாடுகள் பாடவிதானம், இணைப்பாடவிதானம், மறைபாடவிதானம் போன்வற்றை உள்ளடக்கி திட்டமிடப்படுகின்றன.

அறிவு, திறன். மனப்பாங்கு என்பன பாட விதானத்துறைகளில் எட்டப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது கற்ற விடயங்கள் நாளாந்த வாழ்வில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

ஒரு பாடசாலைக்குள் உள்வாங்கப்படும் பிள்ளை பல்வேறு அறிவுமட்டம், ஆற்றல், திறன்களை கொண்டடோராக இருக்க கூடும். பல்வேறு மனப்பாங்கை கொண்டிருக்காலம். இம் மனப்பாங்குகள் குடும்பச் சூழல், அனுபவங்கள் நுண்ணறிவு, பரம்பரை என்பனவற்றால் வடிவமைக்கப்பட்டிருக்கலாம்.

எவ்வாறெனினும் தனியாள் வேறுபாடுகளுடன் பெரும்பாலான விடயங்களில் ஒருமைப்பாட்டுடன் உருவாக்கப்பட வேண்டும் இங்கு அதிபரின் திட்டமிடுகையும், ஆசிரியர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிப்பான சேவையும் இன்றியமையாதவை. பிள்ளைகளை இனங்காணலை திறம்படச் செய்தாற்றான் திட்டமிடலை செம்மையாக செய்யமுடியம்.

பாடவிதானம்" அறிவை மையாமாகக் கொண்டது. புலமைப்பரிசிற்பரீட்சைப் பெறுபேறுகள், க.பொ.த. சாதாரண, உயர்தர பெறுபேறுகள் என்பன அறிவின் அடைவுமட்டத்தைக் காட்டுகின்றன.

இணைப்பாடவிதான செயற்பாடுகள் மாணவர்களில் மறைந்துள்ள ஆற்றல்களை வெளிக்காட்டுவதற்கு வழியமைத்துக் கொடுக்கின்றன. இதற்கென வரையறுக்கப்பட்ட பாடதிட்டம் இல்லாவிடினும் சட்ட திட்டங்கள் நெறிமுறைகள் உள்ளன. மாணவர் பண்பு, பிரதேசம் , உளப்பாங்கு என்பாவற்றுக் கேற்ப இது தெரிவு செய்யப்பட வேண்டும். விளையாட்டு, தலைமைத்துவம் திறன் விருத்தி என்பன சகல பாடசாலைகளுக்கும் பொதுவானவையாகும்.

விளையாட்டு, மாணவமன்றம், காலைக்கூட்டம், மாணவ தலைவர் முறை, பல்வேறு சங்கங்கள், பொழுது போக்குக் கழகங்கள், போட்டிகள், பொருட்காட்சி, பாடசாலை மட்ட நிகழ்ச்சிகள் என்பனவற்றை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தும் போது மாணவர்களுள் மறைந்துள்ள இயல்பான ஆற்றல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. முதன்மையாதல், பாராட்டு, கணிப்பு, தன்னடைவு, வெளிப்பாடு, அன்பு, குழுவுணர்ச்சி, தோழமை போன்றன மாணவர்களுக்கு நிறைவேற்றுகின்றன. இச் செயற்பாடுகள் கற்றலுக்கு மேலதிக துணையாக இருப்பதுடன் ஒழுக்க விழுமியங்களைக் கற்றுக் கொள்ளவும் சட்டதிட்டங்ளுக்கு அடிபணியவும் உதவுகின்றன. அத்துடன் தலைமைத்துவத்தை மதித்தல் கட்டுப்பட்டு இயங்குதல் போன்ற பண்புகளைப் பழக்குகின்றன.

மறைபாடவிதமானம் ஒழுக்க விழுமியங்களைக் கொண்டது. எழுதப்படாதது பாடசாலைக் கல்வி நிலை ஆசிரியர் மனப்பாங்கு அனுபவம் சமயம் மரபு வழக்கு எனப்பவற்றால் உருவானது. மாணவர் அவ்வப்போது தவறுவிடும்போது கண்டிக்காமல். அவர்களை அன்புடன் அணுகி இத்தவறை விளக்கி அவரை மாற்ற முயற்சிக்க வேண்டும். இது பாடசாலையின் கல்வி நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றக் கூடியது.

பாடவிதானம், இணைப் பாடவிதானம், மறைபாட விதானம் ஆகிய மூன்றும் அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றை விருத்தி செய்கின்றன.

ஒரு பாடசாலைக்குள் உள்வாங்கப்படும் மாணவர் இம்மூன்றையும் கற்கும்போது அறிவைப் பெற்று, திறனை வளர்த்து, மனப்பாங்கு மாற்றத்தை உருவாக்கிக் கொண்டால் நாளாந்த வாழ்க்கையில் நல்லதொரு பிரஜையாக வாழ முடியும். தனிமனிதன் நல்ல பண்புகளுடன் வாழும்போது சமூகமும் பண்புள்ளதாக மாறும்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி அவன் தானும் வாழ்வதுடன் சமூகத்தில் பொறுப்பான பணிகளையும் செய்கின்றான். இதனால் பொறுப்பேற்றல் வழிநடத்தல் வழிச்சொல்லல் போன்ற கடமைகளுக்கு உட்படுத்தப்படுகின்றான். இதனால் ஏதோ ஒரு வகையில் தலைமைத்துவத்தை ஏற்க வேண்டியுள்ளது. குடும்பத்தில் தந்தையாக சமூகத்தில் தலைவனாக தொழிலில் நிர்வாகியாக அவன் தேடுவடுமுண்டு, அவனைத் தேடிவருவதுமுண்டு எனவே கல்வி வழங்கும் பாடசாலைகள் தலைமைத்துவப் பண்புகளையும் பாடவிதானத்துடன் சேர்த்தே வழங்க வேண்டியுள்ளது.

சமூக ஒழுங்கிற்கு பங்களிப்பு செய்யக் கூடியவர்களையும் அதை விளங்கி செயற்படுவர்களையும் தலைவர்கள் என ஹொரஸ்சின்ங் குறிப்பிடுகின்றார். இத்தகையை தலைவர்களிடம் பின்வரும் பண்புகள் இருக்க வேண்டும்.

தன்னை விளங்கிக்கொள்ளல், மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளல், பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளல் தம் நோக்கத்தை அடையும் வண்ணம் தம் குழுவை வழி நடாத்துதல்.

விமர்சனங்களை ஏற்றல், நடு நிலை, விடாமுயற்சி எண்ணங்களை எடுத்து விளக்கும் ஆற்றல், தொடர்பாடல் போன்றன தலைமைத்துவ பண்புகளுடன் சில ஒருவரிடம் இவை அனைத்தும் இருக்கும் போது அவன் ஏனையவற்றை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவபண்புகள் எவையும் இல்லாம் எவரும் இல்லை ஒன்றோ பலவோ அவனது இயல்பில் இருக்கக்கூடும். இல்லாதவற்றை வளர்த்துவிட வேண்டிய பொறுப்பு பாடசாலைக்குரியது.

எனவே பாடசாலை என்பது புத்தக அறிவை மட்டும் வழங்கும் இடமாக மட்டுமன்றி ஏனைய பண்புகளையும், அனுபவங்களையும் திறனையும் சேர்த்து வழங்கும் நிலையமாக அமைய வேண்டும். இதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் புத்தாக்க சிந்தனை உடையவர்கள் இருக்க வேண்டும். பாடசாலைக்கு சமய நிறுவனங்கள், வீடு குடும்பம் என்பனவும் இதில் பங்களிப்புக்களைச் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலாநந்தர் எழுதியது

(5)

My dear Doctor, Your kind card of the 31st ultimo redirected from Batticaloa was duly received. I am at present at Annamalainagar, Chidambaram and I shall probably go to Ceylon by the middle of September. Swami Avinasanandaji and Swami Sharvanandaji are at present in Colombo, their

address is, Ramakrishna Mission, Sri Wickrama Road, Wellawatta, Colombo. If you would pay a visit to Colombo you may see them both as well as the two resident Swamis who carry on the Mission. If you want to meet me and I can see you at Matale about the 20th September. Kindly write to me. I am keeping good health and hope this will find you in health. With loving regards

Yours in the Lord

Swami Vipulananda

To. Dr K. P. Somasundaram
Union Pharmacy
Matale.

Annamalai University
Annamalainagar
Chidambaram S. India
14/8/1932

சுவாமி
விபுலாநந்தர்
எழுதியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. W. DEVANAYAGAM, J. P. U. M.
MEMBER OF PARLIAMENT
PROCTOR S. C. & NOTARY PUBLIC

TEL: 33 - ERAVUR.
Chenkaladi.
29. 9. 1969.

නියෝජිත මන්ත්‍රී මණ්ඩලය
பிரதிநிதிகள் சபை
House of Representatives

திரு எம். செல்லையா
தலைவர் – விபுலானந்த கலா மன்றம்
மாத்தளை.

உங்களின் 23.9.69 ம் திகதி பாராட்டுக் கடிதத்திற்கு நன்றி. இலங்கை அரசாங்கத்திடம் சுவாமி விபுலானந்தா நினைவு முத்திரை வெளியிட வேண்டி வற்புறுத்தியது எனது கடமையும் சுவாமி அவர்களுக்கும் தமிழுக்கும் நான் செய்யும் பணியும் என்றே கருதுகின்றேன்.

தபால் தந்தி அமைச்சர் இம்முத்திரை வெளியிடுவதற்கு உறுதி கொடுத்திருக்கிறார். இந்த அரசாங்கம் தமிழ் மக்களிடம் வைத்திருக்கும் பற்று நன்கு விளங்குகிறது. சுவாமியின் பிறந்த தினத்தன்று இதை வெளியிடும்படி நாம் வேண்டியுள்ளோம். அதற்கு

அமைச்சரும் உறுதியளித்து [illegible].

வணக்கம்.

இவ்வண்ணம்,
தங்கள் அன்புள்ள
K. W. Devanayagam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பற்ற கல்வியால் பயனென்ன ?

## முத்தமிழ் விழா போட்டியில் முதலாம் இடம்

செல்வி உ.புவனேஸ்வரி
மா/மிட்லண்ட் தமிழ் வித்தியாலயம் KP/04/06

கல்வி என்பது கரையில்லாப் பெருங்கடலாகும். கல்விக்கடலில் பயணிக்க பண்பும், அறிவும் படகுகளாக அமைகின்றன. கல்வி என்றும் அழிவில்லா,அளவில்லா, வற்றாத ஊற்றாகும். கல்வி எனும் அரிய பொக்கிஸத்தை பெற நாம் அயராது உழைக்க வேண்டும். இவ்வுலகில் பண்பால் உயர்ந்த மகான்கள் பலர் அவர்களுள், சுவாமி விவேகானந்தர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாந்தர், திரு வள்ளுவர், அறிஞர் அப்துல்கலாம், சுவாமி ராமகிருஸ்ண பரமஹம்சர், அன்னை தெரெசா, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் போன்றோர் தாம் பிறருடன் பழகும் போதும், பேசும் போது சிறந்த பண்பினை வெளிக்காட்டினர். இவர்களைப் போல் நாமும் வாழ வேண்டும். வானுக்கு நட்சத்திரங்கள் அழகு சேர்ப்பதை போன்று கல்விக்கு, நல்ல பண்பு அணிகலனாகின்றது.

ஒரு மனிதன் சமூகத்துடன் ஒன்றினைந்து வாழ வேண்டுமானால் அவனுக்கு கல்வித்தகமையை விட நல்ல பழக்கவழக்கங்களே அவசியமானதாக திகழ்கின்றது. நாம் ஏன் பாடசாலை செல்கின்றோம்? நல்லப் பண்புகளையும், கல்வியை பெற்றுக்கொள்வதற்காகவும் சிறந்த பிரஜையாகும் எண்ணத்தை ஏற்படுத்தவுமே ஆகும். "தொட்டில பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழியானது, நாம் சிறுவயதில் பழகும் பழக்கவழக்கங்கள் எம் உடல் எரிந்து சாம்பலாகும் வரை தொடரும் என்னும் கருத்தை உணர்த்துகின்றது. அதனாலேயே நாம் பாடசாலை எனும் புனிதமான தலத்தில் ஆசான் என்னும் இறைவனை கண்டு கல்வி கற்க செல்கின்றோம். அவர் எமக்கு நல்ல பழக்கவழக்கங்களை சொல்லிக் கொடுக்கின்றார். "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" என்றால் நாம் ஏட்டில் சுரைக்காயை வரைகின்றோம். ஆனால் அந்த சுரைக்காய் கறி சமைக்க உதவாது . அந்தத் சுரைக்காயை இன்று விதைத்தால் தான் எதிர்காலத்தில் மரமாகி கனி தரும். இதற்கு அறிவு என்ற ஆயுதம் வேண்டும் . நாம் கல்வி என்னும் பட்டத்தை மட்டும் பெற்றால் போதாது நல்ல பண்புள்ள மனிதன் என்னும் தலைசிறந்த பட்டத்தையும் பெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சமுதாயத்தில் நல்ல மனிதனாக திகழ்வதற்கு எம்மிடையே சிறந்த ஆளிடைத் தொடர்பு, உண்மை பேசுதல், மனவடக்கம், சமய விழுமியங்கள், தூய்மை, ஒழுக்கம் போன்ற சிறந்த பண்புகள் காணப்பட வேண்டும். பண்பு உள்ளவர்களிடையே அன்பும் பெருகும். பண்புள்ள, நல்ல மனிதனையே இவ்வுலகம் நாடும். பண்பு நிறைந்த கல்வியே வாழ்க்கையை முன்னேற்றும். வாழ்வினை வளமானதாக மாற்றும். நாம் சிறுவயதிலிருந்தே பழக்கங்களை வழக்கமாக்கி கொள்ள வேண்டும்.

எமது மூதாதையர் காலத்தில் பல நவீன தொடர்புச் சாதன வளர்ச்சிகள் காணப்படவில்லை. அவர்கள் கல்வியை பயிலுவதற்கு குரு குலத்திற்கே சென்றனர். அங்கு குருவின் வீட்டிற்கு சென்று அவருக்கு மதிப்பும், மரியாதையும் அளித்து பணிவிடை செய்து கல்விக்கற்றனர். அன்றைய சீடர்களிடையே குருபக்தி காணப்பட்டது. நாம் குருபக்தியுள்ள மாணவன் என்ற வார்த்தைக்கு உதாரணமாக, ஏகலைவனை குறிப்பிடலாம். இவர் குருவை நேரில காணாது, அவரை சிலையாக வடிவமைத்து வணங்கி பல வித்தைகளை கற்றுக்கொண்டார். இன்றைய சமுதாயத்தினரிடம் நாம் இவ்வாறான பண்புகளை பணம் கொடுத்தே வாங்க வேண்டும், வளர்ச்சி கண்ட தொடர்பு சாதனங்கள் இன்று மாணவ சமுதாயத்தையே மாற்றியமைத்துள்ளது. இருபத்திநான்கு மணித்தியாலயங்களுகளும் மாணவர்கள் இச் சாதனங்கள் மூலம் பல்வேறு தகவல்களை பெற்றுக்கொள்கின்றனர். இதன் மூலம் வேலைகளை நாளுக்கு நாள் குறைவடைந்துக் கொண்டே வருகின்றன.

இன்றைய விஞ்ஞான மனிதன் நிலாவிலே உலா வருகின்றான், தொழினுட்ப வளர்ச்சியால், மயிலிற்கும் மையும் மாறி, ஏடும் எழுத்தாணியும் மாறி தொடர்புசாதனங்கள் தோன்றிவிட்டன. சிறுவயதிலே கிட்டிப் புள்ளும் பம்பரமும் ஆடிய அழகு என்ன? நிலாச்சோறின் இனிமை-யென்ன? திருட்டு மாங்காயின் சுவைதான் என்ன? இவற்றையெல்லாம் இந்த சமூகம் அனுபவித்திருக்க மாட்டது. கல்வியைப் பெற குருகுலம் நாட வேண்டிய அவசியமில்லை. இன்றை சாதனங்கள் கல்விப் பயில்விக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன பொருட்களின் பாவனையால் கைக்குட்டையளவு ஆடையை அணிந்துக் கொண்டு எமது கலாசாரத்திற்கு, பண்பாட்டிற்கும் அழிவை ஏற்படுத்துகின்றனர். எமது தாய் மொழியில் பல்வேறு ஆங்கில வார்த்தைகளை புகுத்தி இழிப்படுத்தகின்றனர். கல்விப் பயின்றிருந்து வாழ்க்கைப் பண்புகளை மறக்கின்றனர். இவ்வளவு காலம் ஆண்கள் போதை, மது என்பவற்றை வழக்கமாக்கிக் கொண்டனர். ஆனால் நாட்டின் கண்களான பெண்களே மது பாவனையை வழக்கமாக்கியள்ளனர். இன்று மனிதத் சமுதாயம் "நிலா நிலா நிலா ஓடி வா" என்று நிலாவை அழைத்து பாடிய காலம் மறைந்து, நிலாவிலே காலடியெடுத்து வைத்து குடிபுக கண்டுப்பிடிப்புக்களை மேற்கொண்ட வண்ணம் உள்ளது. இங்கே "பண்பு" என்ற வார்த்தைக்கு இடமில்லை. மாணவர்கள் கல்வியோடு, பண்பையும் பயின்றால் மட்டுமே, வாழ்க்கை எனும் வெற்றிப்படிக்கட்டில் உயர்ந்து செல்லாம். பல கலை பயின்றால் பண்பு என்னும் கலையையும் நிச்சயம் பயிலவேண்டும்.

நெருப்பில்லாமல் புகைவருமா? என்பதைப் போல் ஒரு மனிதனுக்கு கல்வியினை பெற பண்பு அடித்தளமாகின்றது. பண்பு இல்லாமல் கல்வி செல்வம் நிலைக்காது. ஒரு அழுக்குப் படிந்த சேலையில் அல்லது துணியில் நிறச்சாயம் போட்டால் அது நிலைக்காது. அழுக்குப் படியா துணியிலே எவ்வளவு நிறச்சாயம் போட்டாலும் அது அழகுடன் இருக்கும். அதைப் போலவே சிறுவயதிலிருந்த நல்ல பண்புள்ள மனிதனாக இருந்தாலே கல்விச் செல்வம் வளர்சியடையும். இன்று படித்த பண்புள்ள மனிதனுக்கே நாட்டின் எந்த இடத்திலிருந்தாலும் மதிப்புக் கிடைக்கும். ஒரு பாடசாலையின் மாணவத் தலைவனை தேர்ந்தெடுக்க வேண்டுமானாலும், அவனின் கல்வித் தகைமையை விட பண்பு என்ற சிறந்த ஒழுக்கமே உயர்ந்ததாக கருதப்படும். நாம் சிறந்த தலைமைத்துவத்திற்கு உதாரணமாக, எறும்பினை கூறுகின்றோம். ஒரு தலைவன் எறும்பு எங்குச் செல்கின்றதே அதே வரிசையிலேயே அடுத்த எறும்பு செல்லும். இந்த தலைமைத்துவத்திற்கு சிறந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கவழக்கங்களே அவசியம்.

எம்மை சிறுவயதிலிருந்தே உணவு கொடுத்து, உடை, பாதுகாப்பு, அன்பு, ஆதரவு என்பவற்றை கொடுத்து வளர்ப்பவர்கள் தாய், தந்தையே. பத்துமாதம் கருவிலே சுமந்து, பாலுட்டி, சீராட்டி வளர்ப்பவர் எம் தாயே, அட்டைக்கடியிலும், இரத்தம் சிந்தி, வியரவை சிந்தி எம்மை வளர்ப்பவர் தந்தை இவர்களே எம்மை இந்த உலகத்திற்கு அறிமுகம் செய்தவர்கள். இவற்றையெல்லாம் மறந்த இந்தச் சமுதாயத்தினர் படித்த பட்டம் வாங்கி நவீன வாழ்க்கைக்கு பழக்கமாகி தாய், தந்தையரை வீட்டில் வைக்க சிரமப்பட்டு, முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுகின்றனர். இந்த நிலையில் பண்பு என்ற சொல்லுக்கு இடமில்லை. தொடர்பு சாதன பொருட்களுக்கு இடம் கொடுத்த இச்சமுதாயம் பெற்ற தாய், தந்தையருக்கு இடம் கொடுக்க மறந்து விட்டது. இதனை நினைக்க மிக வருத்தமாகவுள்ளது. பலகலை பயின்றதும் நாம் பெற்றோரை மறக்கக்கூடாது. பெற்றோர் எமது கண்கண்ட தெய்வங்கள். நாம் பல்வேறு மகான்களைப் போற்றி அவர்களின் வழி வாழ வேண்டும். நல்ல வழக்கங்களை பேண வேண்டும். பிறரைப் பார்த்து சிரித்து வாழவேண்டும் பிறர் எம்மைப் பார்த்து சிரிக்குமளவுக்கு இருக்க கூடாது.

நாம் பிறந்த வளர்ந்த நாட்டிக்கும், வீட்டிற்கும் நன்மை செய்யவேண்டும். வள்ளுவளின் கூற்றிகிணங்க வையத்துள் வாழ்வாங்கு வாழப் பழக வேண்டும். அடுத்த மாகத்மாவாக மாறவேண்டும். நல்ல பழக்க வழக்கங்களை பேண வேண்டும். வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் பயின்று ஏட்டுச் சுரைக்காயாக வாழ கூடாது. பண்புள்ள கல்வியை பெற்று பண்புள்ளவராக வாழவேண்டும். நவீனத்துவத்தினால் நன்மைகளை மட்டும் பெற்று நல்லப் பிரஜை வாழ வேண்டும். “நன்றே செய்மின் அதை இன்றே செய்மின்” என்பதற்கமைய இன்றே பண்புள்ளவராக மாறவேண்டும். பிறர் கூறும் அறிவுரைகளில் நல்லனவற்றையே நாம் பெற வேண்டும். மாதா, பிதாவை வணங்கி வாழ்வோம். இரவு வானுக்கு அழகு சேர்க்கும் நட்சத்திரங்களாக மிளிர்வோம். தமிழ்கல்வியை மதித்து தமிழனாக வாழ்வோம். நல்ல பிரஜையாக நாட்டிற்கு பெருமை சேர்ப்போம் . பண்பையும் கல்வியையும் உயிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை



# சுவாமி விபுலாநந்தர் - பன்முகப் பார்வை

*கலாபூஷணம் மாத்தளை பெ.வடிவேலன்*

இலங்கைத் திருநாட்டில் மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கார் இருளைக் கிழித்து எழும் உதயசூரியன் போல் காரைத்தீவில் அவதரித்த முத்தமிழ் வித்தகர், இசைத்தமிழ் முனிவர் சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு மலர்ந்த பின்னர் வான்கூடும் மலைநகராம் மாத்தளையில் அவர் புகழ் பரப்பும் சுவாமி விபுலாநந்தர் கலாமன்றத்தினர் தனது ஐம்பதாண்டு நிறைவினை சுவாமியின் விழாவாகக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியதுடன், காத்திரமான இப்பணியினை நிறைவேற்றி வரும் மன்றத்தின் தற்போதைய தலைவர் கலாபூஷணம் ராஜ்சிவா, செயலாளர் ஜெ.ஜெயராஜ் மற்றும் உறுப்பினர்கள் அனைவரின் செயற்பாட்டினை பாராட்டிற்குரியதுமாகும்.

சுவாமி விபுலானந்தர் அறவாழ்வினை மேற்கொண்ட துறவியாவார். தவவாழ்வினை அவர் மேற்கொண்டாலும் தமிழ்பற்றையும், சமூகப்பற்றையும், மனிதநேயத்தையும் துறந்தவரல்ல. நடமாடும் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்த தமிழ் பேரறிஞர். ஆழ்ந்த தமிழ்புலமையோடு, ஆங்கில அறிவும், விஞ்ஞான அறிவும் நிறைந்தவர். ஆய்வே அவரது ஞானக்கண் அவரது ஆய்வுகள் பல பரிமாணங்களைக் கொண்டவையாகும். பரந்துபட்ட அவரின் ஆளுமையும், சிந்தனைகளும் வியக்கத்தக்கவை.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் புகட்டிய சமரச நெறியை வாழ்வில் கடைப்பிடித்த அவர் மனிதனை உருவாக்கும் கல்விக்கொள்கையை தான் தொடங்கிய கல்விக்கூடங்களில் நடைமுறைப்படுத்தியவர்.

அந்நியருக்கு அடிமைப்பட்ட, தாழ்வுற்றிருந்த இலங்கைத் தமிழ் சமூகத்திற்கு அவர் விடிவெள்ளியாகும். அவரது வாழ்வும், பணிகளும் என்றும் நமக்கு வழிகாட்டியாகத் திகழும் பின்பற்றத்தகுந்தவை. அவர் உலகிற்கு எடுத்தியம்பிய கீழைத்தேய நாகரீகம், பண்பாட்டு விழுமியங்கள் நமக்கு பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ப்பவையாகும். வேதாந்தத் துறவியாக நமக்கு பெருமை சேர்பவையாயும் வேதாந்த துறவியாக வாழ்ந்த அவர் ஆங்கிலமொழியில் பெற்றிருந்த புலமை காரணமாக சேக்ஸ்பியரின் நூல்களை மொழி பெயர்த்தார்.

தமிழில் கலைச்சொற்கள் அவசியம் என்பதை அறிந்த அவர், பல கட்டுரைகள் மூலம் இதை வலியுறுத்தினார். "உயிருள்ள மொழியானது பிறமொழித் தொடர்பு கொண்டு தனக்கரிய சொற்களஞ்சியத்தை பெருக்கிக்கொள்ளுதல் வேண்டும்" என்று அன்று அவர் எழுதியமை இன்றும் நமக்கு பொருந்தும்.

நீண்டகாலமாக அரசியல் உரிமையின்றி அடிமை வாழ்வு வாழ்ந்த தமிழ் சமூகத்தினரிடையே தேசப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று என்பவற்றை உருவாக்கும் வகையில் அவருடைய கல்விக்கொள்கை அமைந்தது. 1952 ஆம் ஆண்டு திருகோணமலையில் தமது கல்விப்பணிகளை ஆரம்பித்த அவர் காந்தியடிகளின் ஆதாரகல்விமுறையினையும், வீரத்துறவி விவேகானந்தரின் ஆலயப்பிரசங்கங்களையும், அமரகவி பாரியாரின் தேசியகீதங்களையும், ஆதார சுருதியாகக் கொண்டார். பக்கதிப்பாடல்கள், மேல்நாட்டு உடற்பயிற்சி, கீழ்நாட்டு உடற்பயிற்சி என்பனவும் அவரது கல்விக் கூடங்களில் உள்வாங்கப்பட்டன.

இலங்கையின் உயர்வுக்கு தொழிற்துறைக்கல்வி மிகமிக முக்கியமானதொன்று 1941லேயே வலியுறுத்தினார். தமிழ் பேராசிரியராகவும், அண்ணாமலை பல்கலைக்கழக முதல் தமிழ் பேராசிரியராகவும், இலங்கை பேராதனைப் பல்கலைக்கழக முதல் தமிழ் பேராசிரியராகவும் பணிபுரிந்த காலத்தில் தமது கல்விக்கருத்துக்களை பல்கலைக்கழக மட்டத்திலேயே இடம் பெறச் செய்தார். மாணவர்களுக்கு இலக்கியம் கற்பிக்கும் போது கற்பனா சக்தியை ஏற்படுத்த வேண்டுமென அடிகளார் எடுத்துரைப்பார். வரலாற்றினை கற்பிக்கும்போது உலகப்பெரும் சமயங்களையே சிறந்த முறையென கூறினார்.

விபுலாநந்த அடிகளார் சங்க நூல்களையும், தமிழ் இலக்கணங்களையும் கற்றுத் தெளிந்த பேரறிஞர், ஞான உபதேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று, ஆன்மீக சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்த அவரது உள்ளம் கவியுணர்வும், கலையுணர்வும் மிக்கது. அடிகளாரின் கவிதைகள் பெரும்பாலும் சமயத்துறையினை தழுவியதாகும். தமிழ் கவித்துறையில் புரட்சிகரமான மாற்றங்களை மேற்கொண்ட மகாகவி பாரதியாரை பிற்போக்குவாதிகள் புறந்தள்ளிய வேலையிலே "பாரதிகழகம்" அமைத்து பாரதி புகழை தமிழ்நாட்டில் பரப்பிய பெருமையும் விபுலாநந்தரையே சேரும். அவர் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்திலும் தேசிய இயக்கத்திலும் ஈடுபட்டு பங்காற்றியவர்.

சுவாமி விபுலாநந்தர் பல்வேறு அறிவியல்களுக்கும் தம் அளப்பரிய பங்களிப்பினை நல்கியுள்ளது போல இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுக்கும் தமது ஈடுபாட்டினால் பெரும் சேவையாற்றியுள்ளார். பண்ணிசை, இந்திய இசை, இசைப் பாடல்கள், இசைக்கருவிகள், நடனம். நாடகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் உறுதுணையானவர். நாடகத்தமிழ் பற்றிய மதங்க சூளாமணியும், தமிழிசைப் பற்றிய யாழ்நூலும் அவரால் நமக்குக் கிடைத்த அரும் பொக்கிஷங்களாகும்.

வழக்கொழிந்து போன தமிழ் தம் மகோன்னதமான இசைக்கருவியான யாழை யாழ்நூலாகத் தந்த அடிகளாருக்கு தமிழினம் தலைவணங்க கடமைப்பட்டுள்ளது. இசை ஆய்வுக்கு கணித நூல் இன்றியமையாதது. ஆதலால் அடிகளார் தமது கணிதப்புலமையை இவ்வாய்வுக்குப் பயன்படுத்தி இசைக்கணிதம் பற்றியும், வானநூல்கள், ஜோதிட நூல்கள் என்பவற்றில் எண்கள் கையாளப்படும் முறைமைபற்றியும் அடிகளார் யாழ்நூலிலே விளக்கியுள்ளமை விசேட அம்சமாகும்.

இந்திய இசை மரபிலே வீணை, சித்தார், தம்புரா, வயலின் முதலான நரம்பிசைக்கருவிகள் சிறந்து விளங்குகின்ற போதிலும் பண்டையத் தமிழகத்தில் யாழ் இசைக்கருவி பல்வேறு வடிவங்களில் சான்றுகளுடன் யாழ்நூல் நிறுவுகின்றது. தமிழிசைக் கால ஆய்வில் ஈடுபட்ட அடிகளார் குடுமியா மலைக்கல்வெட்டைப் பற்றியும், குடுமியா மலை கற்பாறையிலே தீட்டப்பட்ட இசை நூலும், சிந்தண்ணல் வாயில் சித்திரங்கள் உட்பட பல பேருண்மைகளை தனது ஆய்விலே வெளிப்படுத்தி தமிழரின் சிறப்பை உணர்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் தமிழ் உரைநடைக்கும் ஆற்றிய பணிகள் மகத்தானவை, அடிகளார் விஞ்ஞானம் டிப்ளோமா பட்டம் பெற்றவர். மதுரை தமிழ்ச்சங்க பண்டிதர் பட்டமும் பெற்றவர். இவர் சித்தாந்த நூல்களுடன், காவியங்களையும் படித்தறிந்தவர், ஆங்கிலக்கவிதைகளையும், நாடகங்களையும் படித்துச் சுவைத்தவர், தாமறிந்தவற்றை தமிழறிஞ்சர்களும் படித்துப் பயன்பெற வேண்டுமென பல உரைநடை ஆக்கங்களை எழுதினார். ஆங்கிலவாணி, பூஞ்சோலை காவலன் என்னும் இலக்கிய ஓவியங்களைத் தீட்டினார்.

சுவாமிகள் ஆங்கிலத்திலும், தமிழிழும் எழுதிய ஆராய்ச்சிக்கட்டுரைகள் அவரது அறிவுப்பரப்பினையும், ஆழ்ந்த புலமையினையும் புலப்படுத்துவனவாகும். வெள்ளைநிற மல்லிகையோ என்று கேள்வி விடையாக மலரும் அவரது பாக்கள் எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்பதாகும். பக்திச்சுவையும். கற்பனை வளத்தையும் கொண்டு மிளர்பவையாகும். ஆங்கிலம், கிரீக், வடமொழி, சிங்களம் ஆகிய வேற்றுமைமொழிகளையும் நன்கு கற்று நாவன்மை மிக்கவராக விளங்கினார்.

ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் தமிழ்த்திங்கள் வெளியீட்டிலும் மதுரை தமிழ்சங்கத்தத் "திங்கள்" இதழான " செந்தமிழ் " ஏட்டிலும் பல கட்டுரைகளை எழுதிய தமிழரின் பழம்பெருமைகளை உலகறியச் செய்தார். பிறநாட்டு நாகரீகத்தினை ஆராய்ந்து தமிழர் நாகரிகத்துடன் அவற்றை ஒப்பு நோக்கினார்.

தாய்மொழிக்கல்வி, கல்விச்சீர்த்திருத்தம், சாதி ஒழிப்ப, சமபந்திப்போராட்டம் என்பனவற்றில் நேரிடையாக ஈடுபட்ட அவர் அநாதைகள் பராமரிப்பிலும் ஈடுபட்டு முன்னோடியாகத் திகழ்ந்தார். விபுலானந்தர் பற்றிய ஆய்வு கள் பல அவரை தூய துறவியாக மட்டுமே உணர்த்துகின்றன. ஆனால் அவர் அமைதியான சலனமற்ற ஒரு அக்கினித்தீர்த்தம், சமபந்திபோசனம் அநாதைகள் பராமரிப்ப என்பனவற்றிற்கூடாக அவர் ஆற்றிய தொண்டுகள் இதனை நிதர்சனமாக்குகின்றன.

இலங்கை, உலகிற்கு அளித்த அறிஞர்களுள் சுவாமி விபுலாநந்தருக்கு தனியானதோர் இடமுண்டு, அடிகளாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்தொண்டும், சமயத்தொண்டும், சமூகத்தொண்டும் காலத்தால் மறையாது என்றென்றும் நிலைத்திருக்கும். அவருக்கு உலகெங்கும் விழாகொண்டாடி மகிழ்கின்றது. இலங்கையில் மலையகத்தில் கலைவளர்ச்சிக்கும் மாத்தளையில் செயற்படும் சுவாமி விபுலாநந்த கலா மன்றத்தினர் ஆண்டுதோறும் அடிகளாருக்கு விழாவெடுத்து பெருமை சேர்க்கின்றனர்.

சுவாமிகள் பெயரால் அமைந்த இம்மன்றம் தனது பொன்விழாவினை கொண்டாடும் இவ்வேளையில் இம்மன்றத்தின் தலைவர்களாக விளங்கி அமரர்களான எக்ஸ்.சி.ரஞ்சன் பொன் லோகநாதன், உபதலைவர் இராஜகுலேந்திரன், பெருங்காவலர் த.மாரிமுத்து செட்டியார் மற்றும் பெரியோர்களையும் அவர்களின் சேவையினையும் நினைவுகூறுவதுடன் இம்மன்றத்தின் உறுப்பினர்களையும் பாராட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம்



மகளிர் அணியினர்



மருத்துவ குழுவினர்



2018 ஆண்டு முத்தமிழ் விழா குழுவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று தமிழ் வளர்த்த முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தர்..!

எம்.எம்.நீர்முஹம்மத்
(இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேரவை செயலாளர் மாத்தளை)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கிழக்கிலங்கையில் உதய சூரியனாய் உதித்தவர் தமிழறிஞர் விபுலாநந்தர். இவருக்கு பெற்றோர் இட்டபெயர் மயில்வாகனம் என்ற பெயர் மறைந்து செந்தமிழுக்கு அருந்தமிழ் அழகை பயன்படுத்திய தமிழறிஞராகவும், சைவநெறியை சிறப்புடன் வளர்த்தெடுத்த செம்மலாகவும், இராமகிருஷ்ண சங்க துறவியாகவும் விளங்கியதால் இவரின் பெயர் விபுலாநந்தர் என மாற்றம் பெற்றது.

ஆங்கில பட்டதாரியான விபுலாநந்தர் ஆங்கிலத்தில் வித்தகம் பெற்றது மட்டுமல்ல இந்தியாவின் தலை சிறந்த பல்கலைக்கழகமாக விளங்கிய அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இலங்கையில் இருந்து சென்ற முதல் தமிழ் பேராசிரிய பெருமகனாக பணியாற்றிய பெருமை விபுலாநந்தருக்கு மட்டுமே உண்டு.

இளங்கோ அடிகளின் சிலம்பின் சிறப்பை விளக்கம் நெஞ்சைகொள்ளை கொள்ளும் சிலப்பதிகாரத்தின் மீது தீராத காதல்கொண்ட காரணத்தால் "யாழ் நூலை" நமக்களித்தார் அதோடு இயல், இசை, நாடகம் என்று மூன்று தமிழிலும் தேர்ச்சியும், புலமையும் பெற்று "முத்தமிழ் வித்தகரானார் "சுவாமி விபுலாநந்தர்" விவேகானந்தரை போல் தலைசிறந்த ஆன்மீக பேச்சாளராக விளங்கினார்.

அத்தோடு தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்றவராக, தமிழிசையில், மேற்கத்திய நாடகங்கள் மற்றும் புறநானூற்று, சங்கால பழந்தமிழ் நூல்களை தேடி தேடி ஆராய்ந்து இயல், இசை, நாடகங்கள் யாவையையும் ஆராய்வதில் முன்னோடியாய் வல்லுனராய் திகழ்ந்த பெருமகன் விபுலாநந்தர் ஆவார். யாரும் காணாமல் கிடந்த "யாழ் நூலை" பதினான்கு ஆண்டுகள் ஆராய்ந்து "யாழ் நூலை" ஆக்கி, இசைத்தமிழுக்கம் இசைக்கலைக்கும் புது ரத்தம் பாய்ச்சி புத்தயிர் கொடுத்த பெருமகன் என்ற பெயருக்கு சொந்தக்காரர் முத்தமிழ்வித்தகர் விபுலாநந்தர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில்வாகனன் என்ற இளந்தளிர் பெரியவர் சிவானந்த சுவாமிகளால் 1924ம் ஆண்டு "சுவாமி விபுலாநந்தர்" ஆவதற்கு வழி வகுத்தார். அதனால்தான் இராமகிருஷ்ண நிலையங்கள் இந்நாட்டில் வேரூன்றி வளர்வதற்கு காரணமாய் அமைந்தது.

சுவாமி விபுலாநந்தர் பல துறைகளில் தேர்ச்சி பெற்று புகழின் உச்சிக்கு சென்றார். குறிப்பாய் முத்தமிழறிஞராக அற்புதமான நாவலராக, சிறப்பான எழுத்தாளராகவும், நாடு போற்றும் கவிஞராகவும், அருமையான மொழிபெயர்பாளராகவும், நாடக ஆசிரியராகவும், கணித மேதையாகவும், தமிழ், ஆங்கில மொழிகளில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவராகவும், இந்திய அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் இலங்கையில் இருந்து சென்ற முதல் பேராசிரியராகவும் புகழ் பூத்த மதுரை தமிழ் சங்க புலவராகவும் விளங்கிய சிறப்பு சுவாமி விபுலாநந்தருக்கு மட்டுமே சொந்தமானது.

இத்தனை சிறப்புகளும் கொண்ட முத்தமிழ் அறிஞர் விபுலாநந்தரின் "பொன்விழாவை மிக எழுச்சியுடன்" கொண்டாடும் மாத்தளை சுவாமி விபுலாநந்தர் கலா மன்றத்தாரை பாராட்டிமகிழ்வதோடு அவர்களின் மெச்ச தக்க சமூக மேம்பாட்டு நல்ல பணிகளையும் போற்றி புகழ்வதோடு, எதிர்காலத்தில் இப்பகுதியில் கல்வி கற்று கொண்டிருக்கும் மாணவ மாணவியர்களை தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்களாக, சமூகத்திற்கும், நாட்டிற்கும், தலைமை தாங்கும் நல்ல தலைவர்களாக, தமிழ் மொழிக்கும் மொழி சார்ந்த கலை கலாச்சாரம், இலக்கியம் யாவைக்கும் சேவையாற்றும் ஆளுமை மிக்க பெருமக்களாக உருவாக்கிட வேண்டும் என்பதை இந்த பொன் விழா கொண்டாடும் தருணத்தில் அறிவுறுத்தி பொன்விழா சிறப்புடன் நடக்க வாழ்த்தி

"வெள்ளை நிற மல்லிகையோ
வேறேந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிரப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது"

என்ற முத்தமிழ் அறிஞர் விபுலாநந்தரின் புகழ் பூத்தகவிதையை நினைவுறுத்தி மகிழ்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் போற்றும் மனித விழுமியங்களை கடைப்பிடித்து வாழ்வோம்.

**" உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது "**

*வீரசிங்கம் ஜெயக்குமார் - (உபஅதிபர்)*
*மா/பாக்கியம் தேசியகல்லூரி, மாத்தளை.*

பண்பட்ட மனித இனத்தின் அறிவியல் ரீதியான பரிணாமவளர்ச்சிக்கு மொழி இன்றியமையாததாகும். மொழியின் மூலம் பண்பாடும் சமயத்தின்மூலம் கலாசாரமும் இணைந்து மனிதவாழ்வை செம்மைப்படுத்துகின்றன. அவை வாழ்க்கைக்கு வழிகாட்டவும் செய்கின்றன. இதனையே தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. காலத்தின் தேவைக்கேற்ப இறையருள் பெற்ற அவதாரபுருஷர்கள் மண்ணில் தோன்றி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து செயற்கரிய சேவைகள் புரிந்து மறைந்தும் இன்னும் என்றும் எம்மனங்களில் போற்றப்படும் மாமனிதர்களாக திகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் தமிழ்மொழி நலிவுற்றிருந்த காலகட்டத்தில் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பில் தோன்றிய சுவாமி விபுலானந்த அடிகளாரும், பிறமதத்தாக்கங்களால் சைவம் குன்றிய காலகட்டத்தில் யாழ் நல்லூரில் ஒரு நாவலர் பெருமானும் தோன்றி மொழியையும், சமயத்தையும் தம்மிரு கண்களாக கருதி அவை அழிந்துபோகாது காத்து எதிர்கால சந்ததிகளின் கைகளில் ஒப்படைத்து சென்றுள்ளனர். அதன் பயனாகவே இன்று உலகளாவிய ரீதியில் எமது தாய்மொழியாகிய தமிழ்மொழி செம்மொழி அந்தஸ்துப்பெற்று உயர்ந்து விளங்குகின்றது. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழை உலகினுக்கீந்த பெருந்தகை யாழ்நூல், மதங்கசூளாமணி என்னும் இரு பெரும் காப்பியங்களை வழங்கி தமிழ்மொழிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது என்ற உயர்ந்த உன்னதமான கருத்தை உலகினுக்கீந்த பெருமகனாரின் சிந்தனையின் வெளிப்பாடாக "உள்ளமே பெருங்கோயில்" என்பது புலனாகின்றது. மனத்தூய்மை அற்ற எந்த ஒரு வழிபாடும் இறைவனுக்கு ஏற்றதல்ல என்பதே அதன் பொருளாகும். உள்ளம் சுயநலமற்ற அன்பால் நிறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படவேண்டும். மற்றவர்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளை செய்து மகிழுதல், தர்மம் செய்து மனநிறைவு கொள்ளல், மற்றவர் மீது அன்பாகவும், பண்பாகவும் நடந்து கொள்ளல், அனைவரையும் சமமாக மதித்து நடத்தல், நன்றிபாராட்டுதல், அறப்பணிகளை ஆற்றுதல், பொதுநல சிந்தனை, சமூகத்தோடு நல்லிணக்கத்தோடு ஒன்றி வாழுதல், பெரியோர்களுக்கு கீழ்ப்படிதல், இல்லை என்று வருவோருக்கு இயன்றவரை உதவுதல், மனப்பாதிப்புக்கு உட்பட்டோரை ஆற்றுப்படுத்துதல், பசி என்று வருவோர்களுக்கு அவர் பசி போக்கி நம்பசி ஆற்றுதல், சொல்லாலும், செயலாலும் அறம் ஆற்றுதல், நல்வார்த்தை பேசுதல், விருதோம்பல் உற்றார் உறவினர்ளை மதித்து நடத்துதல், இன்னா செய்தார்க்கும் நன்னயம் செய்தல், அன்பு, பண்பு, உண்மை, நேர்மை, பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு, தியாக சிந்தை, அர்ப்பணிப்பு, சமூகநீதி, சமத்துவம், சமூகநியாயம், போன்ற மனித விழுமியப்பண்புகள் நிறைந்த உள்ளமும், அதற்கான செயல்களுமே இறைவன் விரும்பும் இன்மலர்கள் என்ற ஆழ்ந்த கருத்தை, உன்னதமான உள்ளத்தின் உயர்வான குணங்களை மிக மிக அருமையாக அச்செய்யுளில் அடக்கியுள்ளார். இன்றைய சிறார்கள் நாளைய நல்ல தலைவர்களாக மிளிர்வதற்கு இவ்விழுமியப்பணபுகளை உணர்வுபூர்வமாக மனதில் ஏற்று வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டும்.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் இவற்றுக்கு மாறாகவே மனித உறவுகளும், மனிதநடவடிக்கைகளும் அமைந்து காணப்படுதல் வேதனைக்குரிய விடயமாகும். மந்திரங்கள், தீப ஆராதனைகள், அபிஷேகங்கள், வணக்கங்கள் என ஆலய வழிபாடு செய்யும் பக்தர்களில் பலர் மனிதநேயம் அற்றவர்களாக சுயநலம் மிக்கவர்களாக மற்றவர்களின் மனங்களை காயப்படுத்தி அதில் சந்தோசம் காண்போராக, நன்றி மறப்போராக, பெரியோரிடத்தில் மதிப்பற்றவர்களாகி நான், எனது என்ற ஆணவமலத்தோடு வாழ்ந்து வருதல் இன்றைய கலியுகத்தில் சாதாரண நிகழ்வுகளாகி விட்டன.

புறக்கணிப்புகளும், மூடநம்பிக்கைகளும் படித்தவர்களின் பண்பாக காணப்படல், குடும்ப மற்றும் சமுதாய உணர்வுகளை உடைப்பனவாக அமைகின்றது. நல்லவற்றை மறுதலிக்கும் மனப்பாங்கு மிக்கவர்களாகி பிள்ளைகள் குடும்பத்தில் வளர்க்கப்படுதல் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கால வாழ்வை நாமே சிதைப்பதற்கு வித்திடுகிறோம் என்பதை பெற்றோர்கள் நிச்சயம் விளங்கிக்கொள்ள வேண்டும். ஒரு நல்ல குடும்பமே நாளைய நல்லதொரு சமூதாயத்தை கட்டியெழுப்பும் சமூகத்தின் ஒரு அடிப்படை அலகாக காணப்படுகின்றது. எனவே குடும்பம் ஒரு கோயிலாக திகழவேண்டும். அன்பு, பாசம், பண்பு, பக்தி, புரிந்துணர்வு, மகிழ்ச்சி நிறைந்ததாக ஒவ்வொரு குடும்பமும் திகழுமிடத்து பிள்ளைகள் உள ஆரோக்கியத்தோடு வாழும் நிலை ஏற்படும். அதுவே அவர்களை சமூகத்தில் மதிக்கத்தக்கவர்களாக, அவர்கள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் திகழ்வதற்கு வாய்ப்பளிக்கும். இது யார் கைகளில் தங்கியுள்ளது? வாழ்ந்து காட்டும் பெற்றோர்களிடத்திலும், சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர்களின் கைகளிலும் தங்கியுள்ளது. பிள்ளைகள் எத்தகைய சூழலில் பிறந்தாலும் வளர்க்கப்பட்டாலும் ஒவ்வொரு பிள்ளையும் தனக்கென்ற சிறந்த கொள்கையோடும் குணாதிசியங்களோடும் தனித்துவமாக வாழக்கற்றுக்கொள்ளவேண்டும் என்பதே உண்மை.

தமிழ்ப்பண்பாடு என்பதை விட மனிதப்பண்பாட்டில் எந்த மொழியாக, எந்தசமயமாக, எந்த இனமாக இருக்கட்டும் வழிமுறையாக வரும் நம்பிக்கைகள், நெறிமுறைகள், மரபுகள் இந்த 21ம் நூற்றாண்டிலும் செல்வாக்கு செலுத்திக்கொண்டே இருக்கின்றன. எந்த மரபுகள் காலத்தோடு எடுத்துச்செல்லப்பட வேண்டும் எத்தகைய மரபுகள் காலத்தோடு கைவிடப்படவேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருக்கவேண்டும். மனிதம் போற்றும் மரபுகள் கவனமாக பேணப்படல்வேண்டும். அர்த்தமுள்ள பல நல்ல விடயங்களை அர்த்தமற்றதாகவும், அர்த்தமற்ற பல பண்பற்ற விடயங்களை அர்த்தமுள்ளதாகவும் எண்ணி பலர் வாழ்க்கை சமனிலையை சிதைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றமை பிள்ளைகளின் எதிர்கால ஆளுமையையும், ஆரோக்கியத்தையும் கெடுப்பனவாக அமையும்.

இதனால் சில முதியோர்கள் மூடநம்பிக்கைகளை எம்மிடையே திணித்தாலும் இளையோர்கள் முற்போக்கு சிந்தனை உடையவர்களாக வாழ்தல் ஏற்புடையது. மாதா, பிதா, குரு, தெய்வம், பெரியோர் பாதங்களை பணிந்து ஆசி பெறுதல் தமிழ்ப்பண்பாட்டில் எடுத்துச் செல்லப்பட வேண்டிய ஒரு மரபாகும். சகுனம்பார்த்தல் மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்களை காயப்படுத்தும் அர்த்தமற்ற சம்பிரதாயங்கள் காலஓட்டத்தில் அறிவுபூர்வமாக கைவிடப்படவேண்டிய மரபுகளில் சிலவாகும். உதாரணம் ஒன்றை எடுத்துக்கூறினால் இதன் தாக்கத்தை உணர்ந்து கொள்ளமுடியும். ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளைக்கு திருமணம் நிகழ்கின்றது. பெண்கேட்டு செல்லும் போதோ, தாலிகட்டும் போதோ பிள்ளையை பெற்றவர்களின் பெற்றோர்கள் விதவைகள் என்ற ஒரே காரணத்துக்காக நிகழ்வுகளில் முன் செல்ல தடுக்கப்படுதல் எந்த வகையில் நியாயமுடையது. அந்த மூத்தோர்கள் தான் இந்தப்பிள்ளை பிறந்த போது பேரப்பிள்ளை என பெருமிதம் கொண்டவர்கள். பிள்ளைகளின் வளர்ச்சிக்கட்டங்களில் ஒவ்வொரு நிகழ்விலும் உணர்வுபூர்வமாக பங்குபற்றியவர்கள், குழந்தையை குளிப்பாட்டி மகிழ்ந்தவர்கள், உணவூட்டி மகிழ்ந்தவர்கள்,

பிள்ளையை மடியில்வைத்து தாலாட்டி மகிழ்தவர்கள், ஒவ்வொரு பிறந்த நாளிலும் பரிசளித்து முத்தமிட்டு மகிழ்ந்தவர்கள், பிள்ளைகளின் ஒவ்வொரு வெற்றியிலும் வாழ்த்தி மகிழ்ந்தவர்கள். அப்போதெல்லாம் தன்பிள்ளையின் பிள்ளை என்ற உரிமையோடும் உணர்வோடும் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எல்லாம் உதவிய பாட்டிமார்கள் இன்று கணவனை இழந்த அப்பம்மா, அம்மம்மாவாகி எங்கேயோ இருந்து கொண்டு ஆசீர்வதிக்க அனுமதிக்கப்படுவது என்பது எந்த வகையில் நியாயமானது என்பது தெரியவில்லை. வாழ்த்துவதற்கு வேறு யார் தகுதி உடையவர்கள்? மரணம் என்பதும் பிறப்பு, திருமணம் வாழ்க்கை கொண்டாட்டங்கள், மகிழ்வான நிகழ்வுகள் போன்று வாழ்ந்து முடிக்கின்ற ஒரு நிகழ்வே அன்றி மனிதன் வலிந்து செய்கின்ற குற்றமும் அல்ல அபசகுனமும் அல்ல. மரணம் அனைவருக்கும் ஒரு நாள் வரும் என்பதை மறந்து செயற்படும் மனங்களின் விகாரங்களில் இருந்து விடுபட முயற்சி செய்யுங்கள். எல்லோரையும் சந்தோசப்படுத்தும் நபராக மாறுங்கள். நீங்கள் அதில் அளவற்ற மகிழ்ச்சி காண்பீர்கள். ஒரு இயற்கையான நிகழ்வாகிய மரணத்தை காரணமாக கருதி வாழ்ந்து கொண்டிருக்கும் விதவைகளை சமூதாயத்தில் நிகழும் மங்களகரமான விடயங்களில் புறந்தள்ளுவதற்கான காரணமாக எடுத்துக்கொள்வது அல்லது அதனை அமங்களமாக பார்ப்பது என்பது அந்த பெரியோர்களின் மனங்களை எந்தளவு காயப்படுத்தும் என்பதனை அனைவரும் உணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்படவேண்டும். நீங்களும் ஒரு தாயாக, பாட்டியாக மாறும்போது அது ஒரு நாள் புரியும்.

இத்தகைய நிகழ்வுகளில் இந்த போலி சம்பிரதாயங்களை உடைத்தெறிந்து ஒரு பிள்ளை முன்வந்து தனது வளர்ச்சியில் ஒவ்வொரு கட்டத்திலும் பங்கெடுத்த பரம்பரையில் மூத்தோரை முன்கொண்டுவந்து நிறுத்தி அவர்களுக்கு முக்கியத்துவம் அளித்து நல் ஆசிபெற்றால் அதுவே மேலான ஆசியாக இருக்க முடியும். அதுவே முற்போக்கான சிந்தனையுடையதாகும். மனிதம் போற்றும் பண்பான பிள்ளையாகவும் இருக்கமுடியும்.

சுவாமி விபுலாநந்த அடிகளாரை தமிழ் வளர்த்த பெரியாராக மட்டுமே பார்க்கின்றோம். ஆனால் அவர் அக்காலகட்டத்தில் காணப்பட்ட சமுதாயப்பிரச்சினைகளை களைந்தவர். தமிழோடு தமிழர் பண்பாட்டு அம்சங்களையும் முக்கியத்துவப்படுத்தி மக்களின் வாழ்வியலில் கடைப்பிடிக்க அயராது உழைத்தார். குடும்பம், சமுதாயம், சமூகம் அதன் பணிகள் எவ்வாறு திகழவேண்டும் என்பதை எடுத்தியம்பியது மட்டுமல்லாது சமூக உறவுகளை ஒற்றுமையுடன் கட்டியெழுப்ப அரும்பாடுபட்டார். இன்று அடிகளார் இருந்திருந்தால் தமிழ் வளர்ப்பதற்கு பதிலாக குடும்பங்களிலும் சரி சமுதாயத்திலும் சரி சிதைந்து செல்லும் தமிழ்ப்பண்பாட்டை நிலைநாட்டவே அரும்பாடுபட்டிருப்பார்.

அன்பான மாணவர்களே! இங்கு உங்கள் வளமான எதிர்காலத்திற்கு தேவையானது கல்வி மட்டுமல்ல அதற்கு மேலாக மேற்சொன்ன நல்ல விழுமியப்பண்புகளை அகத்தில் வளர்த்துக் கொள்ளுங்கள். அதன்படி செயல்படுங்கள். எல்லா நலமும் உங்கள் வாழ்க்கையில் உண்டாகும். நீங்கள் அடையும் கல்வி வெற்றிகள் பதவிகளையும், உயர்வசதி அந்தஸ்துகளையும் தரலாம். ஆனால் அவை மனநிம்மதியை, மகிழ்ச்சியை, வாழ்க்கை நிறைவை, ஆத்ம திருப்தியை தரவல்லவை அல்ல. அவற்றை தரக்கூடியவை கல்வியோடு கூடிய பண்பு அதாவது மேற்சொல்லப்பட்ட நல்ல விழுமியப் பண்புகளும், உயர்ந்த குணங்களும்தான் என்பதை ஒருபோதும் மறந்து செயற்பட வேண்டாம். இதனாலேயே அடிகளார் அன்று மக்களிடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக்கமலத்தை வேண்டி நின்றார்.

இன்று நாம் போலியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மற்றவர் அறியா வண்ணம் பல்வேறு பிரச்சினைகளோடு வாழ்ந்து கொண்டிருப்பதற்கு முக்கிய காரணமாக அமைவது குடும்ப உறுப்பினர்களிடையே ஒருமித்த நல்ல கொள்கை கிடையாது. அன்று காணப்பட்ட அன்பு, பாசம், அக்கறை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, பொறுமை போன்றவை அழிந்து கிடக்கின்றன. மனம்விட்டு பேசி மகிழ்ந்து உறவாட பொதுவாக பலருக்கு நேரம் கிடையாது. பொருளாதாரத்தை நோக்கியதாக இன்று வாழ்க்கைப்பயணம் மாறிவிட்டது. உறவினர்கள் வீட்டுக்கு செல்ல நேரமில்லை. வீட்டுக்கு வந்தவர்களை உபசரிக்க நேரமில்லை. சிலருக்கு மனசு இல்லை. ஒன்று சேர்ந்து ஒரு சுற்றுலா செல்ல நேரமில்லை, ஒன்றாக இருந்து சாப்பிட நேரமில்லை. மகிழ்வாக குடும்பமாக எல்லோரும் சேர்ந்து கோயிலுக்கு செல்வது கூட அபூர்வமாகிவிட்டது. இக்கட்டுரையை வாசிக்கும் போது இப்படி எல்லாம் நாங்கள் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து செய்கின்றோம், நேரம் கிடைக்கின்றது. அதற்கான மனப்பாங்கும் எம்மிடம் இருக்கின்றது என்று யாரேனும் உணர்ந்தால் நீங்கள் உண்மையில் கொடுத்து வைத்தவர்கள். பிறவிப்பயனை அடைந்தவர்கள் என்றே கூறவேண்டும். இத்தகைய ஆக்கபூர்வமான மகிழ்ச்சியான குடும்ப செயற்பாடுகளுக்கு பெரும்பாலான குடும்பங்களில் தேவையற்ற முரண்பாடுகள் தடைக்கற்களாக மாறிவிட்டன.

இளைய சமுதாயமே விழித்தெழுங்கள். போலிகளை புறந்தள்ளி ஒரு சாராரை மகிழ்ச்சிபடுத்தி இன்னொரு சாராரை துன்பத்திற்குள்ளாக்கும் கருத்தற்ற சம்பிரதாயங்களை அடியோடு விடுத்து யதார்த்தமான சிந்தனைவாதிகளாக மாறி மற்றவர் மனங்களை மகிழ்ச்சிப்படுத்துங்கள். அடுத்த நிமிடம் நிச்சயமற்ற மனித வாழ்வில் உங்களை சுற்றியுள்ளோரை உங்களால் இயன்றவரை சந்தோசப்படுத்துங்கள். அவர்கள் வாழும்போதே உங்கள் உறவுகளை இயன்றவரை கொண்டாடுங்கள் இல்லாவிட்டால் அந்த வலியை அருமையான அந்த உறவுகள் இல்லாத போதுதான் உங்களால் உணரமுடியும். எனவே பிள்ளைகளே நீங்கள் அர்த்தமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடநம்பிக்கைகளுக்குள் புதைந்து போகாமல் வித்தியாசமாக வாழ்ந்து காட்டுங்கள். தனித்துவமான சிந்தனைகளோடு வாழப்பழகுங்கள். அன்பான பெற்றோரே, பெரியோரே உங்கள் அர்த்தமற்ற நம்பிக்கைகளை சம்பிரதாயங்களை உங்கள் அன்பான பிள்ளைகளுக்கு கடத்தாதீர்கள் அல்லது திணிக்காதீர்கள், என பணிவாக கேட்டுக்கொள்கின்றேன். அது மனித மனங்களை பெருமளவில் காயப்படுத்தும். போற்றப்பட வேண்டிய ஆசிர்வதிக்கவேண்டிய உள்ளங்கள் புண்படும்படி, வேதனைப் படும் படி நடவாதீர்கள். இறப்பு என்று ஒன்று ஒரு நாள் எல்லோருக்கும் வரும், அப்போது தான் நாம் எப்படி வாழ்ந்தோம் என்பதை மற்றவர்கள் உணரமுடியும்.

எனது இந்த சிந்தனைக்கான காரணம் வீட்டிலும்சரி, சமூகத்திலும்சரி இன்று முதியோர்கள் பெருமளவில் புறக்கணிக்கப்பட்டு வரும் அவலத்தை காண்கின்றேன். இது ஒரு வேதனை தரும் விடயமாகும். அந்த பெரியவர்கள் இல்லை என்றால் நாங்கள் இல்லை. நாங்கள் இல்லாவிட்டால் எங்கள் பிள்ளைகள் இல்லை என்பதை முதலில் நாம் உணரவேண்டும். அழகிய கட்டடம் ஒன்றின் அத்திவாரத்திற்கு பூச்சுப்பூசி ஒரு போதும் நாம் அழகு பார்ப்பதில்லை. அது மண்ணுள் புதைந்தே இருக்கும். கட்டடத்தின் சுவருக்கும் கூரைக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதற்கு என்னென்னவோ செய்கின்றோம். ஆனால் அந்த அத்திவாரம் உறுதியாக தாங்கி கொண்டு இருப்பதால்தான் அந்த கட்டடம் எம்கண்களுக்கு அழகாக தெரிகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இன்னும் எத்தனை காலத்திற்கு எம்மை ஈன்றெடுத்து வளர்த்து எம்மை ஆளாக்கிய வயோதிப பெற்றோர்கள் எம்மோடு வாழ்வார்கள். அவர்கள் இறந்த பின் அழுவதை விட எம்மோடு அவர்கள் உயிர்வாழும் போதே அவர்களை சந்தோசப்படுத்துங்கள். அவர்கள் மீது அன்பு காட்டுங்கள், அக்கறை காட்டுங்கள். எத்தனையோ போராட்டங்களுக்கு மத்தியில் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து பல சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி எங்கள் உயர்ச்சிக்காக உருக்குலைந்து இன்று வலுவிழந்து பிள்ளைகளால் நோவடிக்கப்பட்டு, பேரப்பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டு பிள்ளைகளின் அன்பை இழந்து இறுதியாத்திரைக்காக நாட்களை அல்லது வருடங்களை எண்ணிக்கொண்டிருக்கும் பெற்றோர்களின் மன நிலையை புரிந்து கொண்டு அவர்களை இறுதிக்காலத்தில் இயன்றவரை மகிழ்சிப்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப உறுப்பினர்கள் முயற்சி செய்ய வேண்டும். இதற்கு விதிவிலக்காக பெற்றோர்களை முதன்மைபடுத்தி அவர்களின் மனம் நோவாமல் நடந்து கொள்ளும், மற்றும் பாட்டி பாட்டாக்களை சந்தோசப்படுத்தும் பெற்றோரும், பேரப்பிள்ளைகளும் எம்மிடையே இல்லாமல் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

"Respect others" என்று சொல்லப்படுகின்ற மற்றவர்களுக்கு மதிப்பளித்தல் என்பது ஒரு உயர்ந்த பண்பாகும். எம்மிடையே இப்பண்பு வெகுவாக குறைந்து வருவதை காணலாம். மேலைத்தேய மக்கள் எமது நாட்டை சிறந்த கலாசார நாடாகப்பார்க்கின்றனர். ஆனால் நாம் நமது பண்பாடு கலாசாரத்தை இன்று இழந்து கொண்டு வருகின்றோம். இதனை நினைத்து எமது தனித்துவத்தை காக்க அனைவரும் முன்வருதல் வேண்டும் இதுவே தமிழ்ப்பணி புரிந்த பெரியார்களுக்கு நாம் செய்யும் கடனும் கைமாறுமாகும்.

சமூகமயமாதலில் பிள்ளைகளுக்கு இருக்கும் குறைபாடுகளே பிற்காலத்தில் அவர்களின் ஆளுமையைப் பாதிக்கின்றன. இதற்கான சந்தர்ப்பங்களை வீடும், பாடசாலையும் அதாவது பெற்றோர்களும், ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு திட்டமிட்டு வழங்குதல் வேண்டும். இல்லம் சிறந்து விளங்கினால் பிள்ளைகளின் உள்ளம் சிறந்து விளங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே பெற்றார்களின் கருத்தொருமித்த செயற்பாடுகள் பிள்ளைகள் பண்பாக வளர்வதற்கு வழிவகுப்பனவாய் அமையும். இன்று மாணவர்களுக்கு தேவை விஞ்ஞானக்கல்வி அல்ல விழுமியக்கல்வியே! பெற்றோர்களும் ஆசிரியர்களும் இணைந்து செயற்பட்டால் நாளைய மனிதநேயம் மிக்க பண்பான சமுதாயத்தை உருவாக்கமுடியும்.

" பணிய பணிய பாவம் அகலும்."

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V.G.S.
# PHARMACY




## No.301, Main Street, Matale.
## T.P : 066 2226374



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" முத்தமிழ் பொன்விழா " சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்..!

# RANI GRINDING MILLS

රාණි මිල්ස් ராணி மில்ஸ்



எங்களிடம் சுத்தமான,
சுவையான மிளகாய்த்தூள்
மசாளாத்தூள், மஞ்சள் தூள்,
கறிபவுடர், கட்டர் மிளகாய்,
மிளகுத்தூள், சீரகத்தூள்,
வறுத்த மசாளா தூள்,
கரம் மசாளா
சிக்கன் மசாளா, ஆகியவை
பெற்று கொள்ளலாம்.

**No. 219, Main Street, Matale.**
**T.P : 066 2222425**

" முத்தமிழ் பொன்விழா " சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்..!

GJ

*Jeya*

# Ganesha Jewellery

*Specialist in 22ct Gold Jewellery*





**No.264, Main Street, Matale.**

*Tel : 066 4903858, 077 5415482*

# Manamagal
## Fancy & Textile

Dealer in all kind of Fancy,
Gift Items, Covering Jewellery
& Indian Textiles







**No. 612 A, Main Street, Matale.**

**Tel : 066 2222075**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Matale Forage Centre

*Dealers in Poultry foods, Vet-Medicines &*

*Highbreed Chicks*

## Authorised Agents For
## " PREMA" Livestock Feed




**No. 197, Main Street, Matale.**

**Tel : 2222043 / 2224030**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

N.Dhusiyantha Prasath
Proprietor

SR

# PHARMACY & GROCERY

**Opening at : 8.00 am to 12. p.m**




**No. 210, King Street, Matale.**
**T.P : 0777 496111 / 075 0106174**

" முத்தமிழ் பொன்விழா " சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்..!



# SAVOY
## Tailors



**25, Meezan Shopping Complex,**
**King Street, Matale.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவ் பாலாஜி கபே


## சைவ உணவகம்


**மாத்தளை மாநகரில் சிறந்த சைவ உணவுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்....**

# New BALAJI CAFE

## Vegetarian Hotel

**Open Time: 6.00 a.m. to 10.00 p.m.**







## No.294, Main Street, Matale.

**Mobile: 077 9792287,**

**Tel : 066 2054467**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANANDA
SEE BETTER, BE BETTER

# ANANDA
## OPTOMETRIST

***Computerized Eye Testing, Contact Lenses & Hearing aid.***



**No. 08, King Street, Matale.**
**Tel : 066 2226500**
**Mobile : 077 3468583**
**E-mail : ananda.medis@yahoo.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MAS


## V.SUTHARSHAN

**MASTER ACCOUNTANCY SERVICE**
**Accountants, Auditors & Tax Consultants.**




**HEAD OFFICE :**
No.360A, Main Street,
Matale.

**BRANCH :**
Kandy, Welimada.



Tel : 066 5672000
Mob : 077 4114101
Fax : 066 2230905

**E-mail : mas_matale@yahoo.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KJW

# Kogilan
## Jewel Works

කෝගිලන්
ජුවෙල් වර්ක්ස්

கோகிலன்
ஜுவெல் வர்க்ஸ்



**No. 119, Main Street, Matale.**
**Tel : 066 2230074**
**Mob : 077 5913322 / 072 2038548**
**E-mail : kogilan55@yahoo.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# *R.Manivannan*

*Attorney - at - Law,*
*Public & Commissioner for Oaths.*

**OFFICE :**

**No.40, King Street, Matale.**
**Tel : 066 2232024**
**Fax : 066 2232024**
**E-mail : manilawyer@gmail.com**

**RESIDENCE :**

**No.3A, Circular Road, Kaludawela,**
**Matale.**
**Mobile : 0777 398673**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R.T.C

## *Thangavelu Chettiyar & Son*

**Wholesale & Retail Dealers in**
**All kind of**
**Oil, Charcoal, Poonac & Salt**



**No. 336, Main Street, Matale.**
**Tel : 066 2222437**
**Mob : 0777 842542**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YOGA MEDICALS



**No.12C, Main Street,**

**Matale.**

**Tel : 066 2227822**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A.O.LAKSHMI INTERNATIONAL TRAVELS


AIR TICKETS ISSUING CENTRE

An Associate firm of
M/S A.O.Oiyawanthan Chettiar & Son Matale
Established in year 1919

விமான டிக்கட் விற்பனையாளர்கள்

මෙහ ගුවන් ටිකට්පත ලබාගත හැක.

No.361/1, Main Street,
Matale, Sri Lanka
Tel : 066 2230581
Fax : 066 4460254



E- Mail : aolakshmi@ymail.com
Hot Line : 077 9051090 / 075 - 0142323




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை சுவாமி விபுலானந்தர் கலாமன்றத்தின் முத்தமிழ்
பொன்விழா சிறப்புற நவோதயத்தின் நல்வாழ்த்துக்கள்.

கண்டி
மாத்தளை

# நவோதயம்

கல்வி நிலையம்

எமது நிலையங்களின் இக்கல்விச் சேவைகளை
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பெற்றிட
எம்முடன் இணைந்திட வாரீர்!

B.A
பேராதெனிய,
தென்கிழக்கு
பல்கலைக்கழகம்

A/L
சகல பாடங்களும்
கலை,
வர்த்தகம்,
விஞ்ஞானம், தொழிநுட்பம்

B . COM
யாழ் பல்கலைக்கழகம்

A/L & O/L SCHOOL
காலை நேர பாடசாலை

O/L முதல் தரம் 1 வரை
சகல பாடங்களும்

ASIAN
கணினி கற்கைநெறிகள்

SPOKEN ENGLISH

அழகுக் கலை

LAW ENTRANCE

தையற் கலை

ஆசிரியர் பயிற்சி கற்கைநெறி

மொழி வகுப்புக்கள்

நவோதயம்

* 172A, இராஜ வீதி, மாத்தளை.
* 60/4, வில்லியம் கொபல்லாவ மாவத்தை, கண்டி
(கண்டி பெரியாஸ்பத்திரி கண்வாட்டுக்கு முன்னால் – புதிய பாதையில்)

0777 802 402 / 0777 870 598



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




SUDHA Printers - Matale - 066-2226579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org